# செம்மணி

நிலம் 3 துகள் 107 வள்ளுவர் ஆண்டு 2052, 06 - 12 ஆவணி 2022 வாரமலர் பக்கங்கள் 20


## வடக்கில் இனி வாரத்திற்கு 5 நாட்களும் பாடசாலை

அடுத்த வாரத்தில் இருந்து வடக்கு மாகாணத்தில் வாரத்தில் 5 நாட்களும் பாடசாலை நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தலைமைச் செயலாளர் சமன் பந்துல சேன அறிவித்துள்ளார்.

இலங்கை முழுவதும் அடுத்த வாரம் திங்கள், செய்வாய், புதன் கிழமை என மூன்று நாட்கள் மட்டுமே பாடசாலை நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளபோதும் வடக்கு மாகாணத்தில் வாரத்தில் ஐந்து நாட்களும் பாடசாலை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக நாட்டில் உள்ள பாடசாலைகள் வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழக் கிழமை என மூன்று தினங்கள் மட்டுமே

பக்கம் 02

### ஆசியான் மாநாட்டில் பக்க நிகழ்வாக

## இந்திய - அமெ. பிரதிநிதிகள் இலங்கை குறித்து திடீர் பேச்சு

*சீனக் கப்பல் வரும் பின்னணியில் அரசியல் திருப்பம்*

இலங்கை நிலமைகள் தொடர்பில் இந்திய மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகள் திடீர் சந்திப்பு நடத்தியுள்ளனர். சீன ஆய்வுக் கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு வருகை தருவது தொடர்பில் ராஜீய நெருக்கடிகள் அரசியலில் ஏற்பட்டிருக்கும் பின்னணியில் இந்தச் சந்திப்பு அரசியல் கவனத்தை ஈர்த்துள்ளது.

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் அமைப்பின் மாநாடு கம்போட்டியா நாட்டின் புஃனோம் பென் நகரில் நடந்து வருகின்றது. அதில் கலந்துகொள்வதற்காக வருகை தந்துள்ள இந்திய அயலுறவுத்துறை அமைச்சர்

பக்கம் 03


### அனைத்துக் கட்சி ஆட்சிக்கு

## ரணில் - சஜித் கட்சி சந்திப்பில் முழுமையான இணக்கம் இல்லை

அனைத்துக் கட்சி ஆட்சி அமைப்பதற்கான முயற்சியில் இறங்கியிருக்கும் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெள்ளிக்கிழமை முதன்மை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் நடத்திய பேச்சு முழுமையாக வெற்றியடையவில்லை என்று தெரிய வருகின்றது.

பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்றை அமைப்பதற்கு

பக்கம் 03



## அணு மின் உற்பத்தியில் மீண்டும் ரணில் கண்

இலங்கை அணு மின் உற்பத்தியில் ஈடுபடலாமா என்பது தொடர்பில் ஆய்வு அறிக்கையைப் பெறுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அட்வகேட்டா இன்ஸ்டிடியூட் என்ற மூலோபாயக் குழு ஒழுங்கு செய்த நிகழ்வில்

பக்கம் 20

## அமைச்சுப் பதவிகள் வேண்டாம் 4 நிபந்தனைகளோடு ஆதரவு!

### டலஸ் அணி அறிவிப்பு



அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்று அமைக்கப்படுமானால், நான்கு நிபந்தனைகளின் கீழ் அதனை ஆதரிப்பதற்குத் தயார் என்று பொது ஜன பெரமுன கட்சியின் டலஸ் அணி தெரிவித்துள்ளது.

இந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அனைத்துக் கட்சி ஆட்சியை அமைப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஏற்கனவே அறிவித்துள்ளது. அனைத்துக் கட்சி ஆட்சி அமைந்தால் நாடாளு

பக்கம் 20

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# புதிய பார்வையும் செயலும் தேவை

அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்றை அமைப்பது தொடர்பில் கொழும்பில் பேச்சுக்கள் நடக்கின்றன. அத்தகைய ஆட்சி ஒன்று அமையும் பட்சத்தில் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கலாமா இல்லையா என்பது குறித்து தமிழ் அரசியல் தரப்பில் விவாதங்கள் நடக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே அது தொடர்பில் இரு தரப்புக் கருத்துக்கள் இருப்பதாகத் தெரிகிறது. கூட்டமைப்புக்குள் மட்டுமன்றி தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் இரு வேறு கருத்துக்கள் இருக்கின்றன.

கூட்டமைப்பில் பங்காளிக் கட்சியான புளொட், நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கு முன்னதாக அமைச்சுப் பதவிகளைப் பெற்று ஆட்சியில் பங்காளியாக முடியாது என்கிறது. அந்தக் கட்சியின் தலைவவர் த.சித்தார்த்தன் இதனை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போதும் அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதும் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

இருப்பினும் கட்சியின் தலைவர் சம்பந்தனும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் அனைத்துக் கட்சி ஆட்சியொன்று ஆமையும்பட்சத்தில் அதனோடு சேர்ந்தியங்குவது தொடர்பில் சாதகமான பார்வையைக் கொண்டிருப்பவர்களாகவே தெரிகிறார்கள். இதற்கிடையில் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவரான கொழும்புக் கிளைத் தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராசாவும் ஆட்சியில் கூட்டமைப்புப் பங்கெடுப்பதை எதிர்க்கிறார். அது தொடர்பில் அவர் கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். அதில் கடைசிக் காலத்தில் தவறான முடிவெடுத்துவிடாதீர்கள் என்று அர்த்தப்படக்கூடிய வகையில் எழுதியுள்ளார். இவ்வாறு கூட்டமைப்புக்குள்ளும் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் ஒரு தரப்பபு அனைத்துக் கட்சி அரசில் பங்கேற்பதற்கு எதிராகவும் மறு தரப்பு ஆதரவாகவும் இருக்கின்றன. எதிர்க்கின்ற தரப்பு முன்வைக்கும் ஒரே காரணம் அரசியல் தீர்வு இல்லாமல் ஆட்சியில் பங்கேற்கக்கூடாது என்பதுதான்.

ஆனால், போரால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகமான ஈழத் தமிழ் இனம் தற்போது பொருளாதார நெருக்கடியாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலை இது. அத்தகையதொரு நிலையில் இந்தச் சமூ கத்தை எப்படி நெருக்கடியிலிருந்து, பாதாளத்திலிருந்து மீட்டெ டுப்பது என்பது குறித்துச் சிந்திக்கவேண்டும். அதைவிடுத்துப் பழைய பல்லவியைப் பாடிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

ஆட்சியில் பங்கெடுக்கக்கூடாது என்று வலியுறுத்தும் சித்தார்த்தனும் சட்டத்தரணி தவராசாவும் பொருளாதார ரீதியாக மிக உச்சத்தில் இருப்பவர்கள். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் அவர்களைப் பாதிப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால் சாதாரண தமிழ் மகன் ஒருவன் போராலும் இழந்து இப்போது பொருளாதாரப் பாதிப்பாலும் இழப்புக்களைச் சந்திக்கும்போது அவன் தனது மீளெழுச்சி குறித்தே அதிகம் சிந்திப்பான். அதற்கு ஆதரவாக யார் இருக்கிறார்களோ அவர்களுடன் சேர்ந்து நிற்கவே விரும்புவான். சாதாரண மக்களின் எண்ணத்தைப் புரிந்துகொண்டு செயற்படுவது அரசியல் தலைவர்களின் கடமை. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் செய்துவரும் அரசியலை இனியும் அதே பாணியில் செய்ய முயற்சிப்பது மடத்தனம். நிலமைக்கேற்ப தமது அரசியலை மேம்படுத்திக்கொள்ளவேண்டியதும் தம்மைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டியதும் அவசியம்.

எனவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பக்கம் நின்று அவர்களின் மீளெழுச்சிக்காக புதிய கோணத்தில் சிந்திப்பதும் திட்டமிடுவதும் தமிழர்களை பொருளாதார ரீதியாகத் தலைநிமிர வைப்பதற்காக உழைப்பதுமே தமிழ் அரசியல் தலைவவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது. இத்தகைய நெருக்கடி நிலைக்குள்ளும் வாக்கு அரசியலை மட்டும் குறிவைத்துச் செயற்படுவதை அவர்கள் தவிர்க்கவேண்டும்.



# சனி மற்றும் ஞாயிறன்று வாகனப் பதிவு இல்லை

எரிபொருள் பாஸ் பெறுவதற்கான புதிய பதிவுகள் 48 மணி நேரத்திற்கு நிறுத்தி வைக்கப்படுவதாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அமைப்பு வெள்ளிக்கிழமை அறிவித்தது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த பராமரிப்புப் பணிகள் காரணமாக இந்தத் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

இதனால் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் எரிபொருள் பாஸ் பெறுவதற்கான புதிய பதிவுகளை மேற்கொள்ள முடியாது. எனினும் ஏற்கனவே பதிவு செய்தவர்கள் தமது கியூ.ஆர். பதிவுகளைக் கொண்டு எரிபொருள் பெறுவதில் எந்தத் தடங்கலும் ஏற்படாது என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

# 46 குடியேறிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பியது ஆஸ்திரேலியா

இலங்கையிலிருந்து சட்டத்துக்குப் புறம்பாகக் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியாவிற்குள் செல்ல முயன்ற 46 பேரை அந்த நாடு திருப்பி அனுப்பியுள்ளது. அந்த நாட்டின் எல்லைப் படைக் கப்பல் மூலம் அவர்கள் வெள்ளிக்கிழமை காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர்.

அனுமதியற்று இலங்கையிலிருந்து புறப்பட்ட படகில் ஆடி 21ஆம் திகதி ஆஸ்திரேலியக் கடற்பரப்புக்குள் நுழைய முயன்ற சமயத்தில் இவர்கள் 46 பேரும் கைது செய்யப்பட்டு எல்லைப் படைக் கப்பலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

திருப்பியனுப்பப் பட்டவர்கள் அனைவரும் வாழைச்சேனை, மட்டக்களப்பு, பாசிக்குடா, அம்பாறை, மூதூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 17 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்கள் அனைவரும் வாழைச்சேனையிலிருந்து கடல் வழியாக ஆடி 6ஆம் திகதி புறப்பட்டவர்கள். இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளுக்காக அனைவரும் இலங்கைக் கடற்படைக்கூடாக குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## வடக்கில்...

நடந்து வந்தது. அடுத்த வாரம் வியாழக்கிழமை முழுமதி தினம் வருகின்ற காரணத்தால் அந்தப் பாடசாலை நாளை புதன் கிழமைக்கு மாற்றி கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அதேநேரம் போக்குவரத்து வசதிகள் தேவைப்படாத பாடசாலைகள் வாரத்தில் 5 நாட்களும் இயங்கமுடியும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இடையே காணப்படும் இணக்கத்தின் அடிப்படையில் இது தொடர்பான முடிவு எடுக்கப்படமுடியும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், வடக்கில் வாரத்தில் 5 வேலை நாட்களும் வழக்கம் போல பாடசாலை நடத்தப்படவேண்டும் என்று ஆளுநர் அறிவித்துள்ளார். பாடசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதி கடினமாக இருக்கும் ஆசிரியர்களுக்கு மட்டும் வாரத்தில் மூன்று நாட்களுக்கு கற்றொழுங்கு வசதி செய்யப்பட வேண்டும் என்றும் ஆளுநர் கேட்டுள்ளார்.

அனைத்து நிலைமைகளிலும் 5 நாள்களும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடக்கூடிய பாடசாலைகள் வாரம் முழுவதும் இயங்கவேண்டும் என்றும் ஆசிரியர்கள் முழு நாட்களும் பாடசாலைக்குச் சமூகமளிக்கவேண்டும் என்றும் அளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

## இந்திய..

கலாநிதி எஸ்.ஜெய்சங்கரும் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் (அமைச்சர்) அன்ரனி பிளிங்கன் ஆகிய இருவரும் பக்க நிகழ்வாக இந்தச் சந்திப்பை நடத்தியுள்ளனர்.
இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நிலவரம் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் தனது கீச்சக (ருவிற்றர்) பதிவில் தெரிவித்துள்ளார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக அந்தப் பதிவில் அமெரிக்கச் செயலர் தெரிவித்துள்ளார்.
உக்ரைன் மீதான ரஷ்ய போரை அமெரிக்கா கடுமையாகக் கண்டித்து ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றபோதும் இந்திய ரஷ்யாவைக் கண்டிக்கவோ பொருளாதார ரீதியாக அந்த நாட்டுடனான உறுவுகளை நெருக்கடிக்குள்ளாக்கவோ இல்லை.இதேவேளை, ஆசியான மாநாட்டின் தொடக்கத்தில் இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியையும் அமெரிக்க ராஜாங்கச் செயலர் பேச்சு நடத்தினார். இலங்கை சவால்க ளையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டாலும்கூட இன்னும் மக்களாட்சியை உறுதிப்படுத்தவும் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சியை அமைக்கவுமான வாய்ப்பும் கிடைத்துள்ளது என்று இந்தச் சந்திபில் அமெரிக்க ராஜாங் கச் செயலர் தெரிவித்தார்.
இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரையும் அலி சப்ரி சந்தித்துப் பேசினார். ஆசியான் மாநாட்டின் பக்கச் சந்திப்புக்களில் தனது முதலாவது சந்திப்பு இது என்று இந்திய அமைச்சர் மகிழ்ச்சி தெரிவித்ததுடன் அலி சப்ரி ஏற்றுக்கொண்டுள்ள புதிய அமைச்சுப் பதவி தொடர்பில் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.
அயலவர் முதலில் என்கிற இந்தியாவின் கொள்கைக்கு ஏற்ப இலங்கை தனது நெருக்கடியிலிருந்து மீண்டுவருவதற்கான இந்தியாவின் உதவிகள் தொடரும் என்று அமைச்சர் ஜெய்சங்கர் அப்போது கருத்துத் தெரிவித்தார்.
ஐரோப்பிய ஒன்றியத்தின் அயலுறவு மற்றும் பாதுகாப்புதுறைச் செயலாளர் ஜோசப் போர்ரெல் பொன்டெல்லஸையும் சந்தித்துப் பேசினார். "இலங்கையில் தற்போது நிகழ்ந்துவரும் மாற்றங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டதுடன், இரு தரப்புகளுக்கும் இடையிலான உறவு மற்றும் ஒருங்கிணைப்புத் தொடர்பிலும் ஆராயப்பட்டது" என்று பொன்டெல்லஸ் தனது கீச்சகப் பதிவில் தெரிவித்துள்ளார்.இலங்கையில் அரசியல், பொருளாதார, நிதி உறுதிப்பாட்டைப் பேணும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் தனது ஆதரவை வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டை வளைத்து பிடிக்க கனிமொழியுடன் மிலிந்த பேச்சு

தமிழ் நாட்டுடனான இலங்கையின் உறவுகளை மேலும் பலப்படுத்தும் விதத்தில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரான கனிமொழியை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட.
நடைபெற்றுவரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்காக புதுடில்லியில் தங்கியுள்ளார் கனிமொழி. இவர் தமிழ்நாட்டின் மறைந்த முதலமைச்சர் மு.கருணாநிதியினது மகளும் தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சகோதரியுமாவார்.
கடந்த ஆனி மாதம் தமிழ்நாடு முதலமைச்சருடன் இலங்கைத் தூதர் நடத்திய பேச்சுக்களின் தொடர்ச்சியாகவே கனிமொழியுடனான சந்திப்பு நடத்தப்பட்டதாக இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.
தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான இன, மத, கலாசார விவகாரங்கள் குறித்து இருவரும் ஆழமாகக் கலந்துரையாடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இரு தரப்புக்களுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்துவதே இதன் நோக்கம்.
தனது நாடாளுமன்ற உரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றையும் தூதுவர் மிலிந்த மொறகொட கனிமொழிக்குப் பரிசளித்தார். இதேபோன்ற புத்தகம் ஒன்றை 2006ஆம் ஆண்டு அவரது தந்தை மு.கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோதும் தாம் அன்பளிப்புச் செய்தார் என்ற தகவலையும் மிலிந்த பகிர்ந்துகொண்டார்.

## ரணில்...

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அழைப்பு விடுத்திருந்தார்.
அதைத் தொடர்ந்து அனைத்துக் கட்சி ஆட்சியை அமைப்பது தொடர்பாக அவர் பல தரப்பினருடனும் பேச்சு நடத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், பொது ஜன பெரமுனவின் டலஸ் அணியினர் ஆகியோருடன் ஏற்கனவே பேச்சு நடத்தப்பட்ட நிலையில் முதன்மை எதிர்க் கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் வெள்ளிக்கிழமை மாலை ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தினார்.
இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தி அனைத்துக் கட்சி ஆட்சியில் இணைந்து கொள்வதற்கான இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை என்று தெரிகிறது. இருப்பினும் அனைத்துக் கட்சி அரசில் இணைந்துகொள்வதற்கான சம்பிரதாயபூர்வ அழைப்பை சஜித் பிரேமதாசவிடம் விடுத்தார்.
இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.
ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தச் சந்திப்பிற்கு சஜித் பிரேமதாச திறந்த மனதுடனேயே வந்திருந்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். நாடாளுமன்றத் திற்கூடாக அனைவரும் இணைந்து எப்படி பணியாற்றலாம் என்பதை அறிந்து கொள்வதற்கு அவர் ஆர்வமாக இருந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.
அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டும், கைது செய்யப்பட்ட அரகலய போராட்டக்கார்களை விடுவிக்க வேண்டும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர் களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் நெருக்காவரங்கள் மற்றும் மோசமான கைதுகள் நிறுத்தப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தியினர் இந்தச் சந்திப்பின்போது வலியுறுத்தினர் என்றும் ஹர்ஷ டி சில்வா தனது கீச்சகப் பதிவில் தெரிவித்திருக்கிறார்.
"சில விடயங்கள் சாதமாக இருந்தன. சில பாதகமாக இருந்தன. இந்த நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பது என்ற விடயத்தில் அனைவரும் சேர்ந்து உழைப்பது என்பதில் இரு தரப்பினரும் இணங்கிப் போயினர். அதனால் அனைத்துக் கட்சி ஆட்சியில் பங்கெடுக்குமாறு ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார்" என்று ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

# புலிகளின் ஓர்மமான மனநிலை உயர்ந்தது

கமலநாதன்



(கடந்தவாரத் தொடர்ச்சி)

1999ஆம் ஆண்டு இறுதிக் காலகட்டத்தில் படைத்தரப்பு மீது புலிகள் உக்கிரமாகத் தாக்கினார்கள். 2ஆயிரமாம் ஆண்டு படைத் தரப்பு பெரியளவான இழப்புகளுடன் புளியங்குளம் வரை பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தத் தாக்குதல் புலிகளுக்கு மிக உற்சாகத்தையும் படையினருடன் போரிட்டு வெல்லமுடியும் என்ற நம்பிக்கையையும் கொடுத்தது. இந்தத் தாக்குதலின் பின் புலிகள் மன்னாரிலும் சாவகச்சேரியூடாகக் காங்கேசன்துறையை நோக்கிச் செல்வதற்காகவும் தாக்குதல்களை ஆரம்பித்தார்கள். சாவகச்சேரி, தனங்களப்பு, கொழும்புத்துறைப் பகுதிகளைத் தாக்கினர்.

கேரதீவு, தனங்களப்புப் பகுதிகளில் படையினர் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டனர். படையினரை மீட்பதற்கு 'எக்கோ' படையணி தலைமையில் பகல் 2மணியளவில் சாவகச்சேரியிலிருந்து படை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தோம். சாவகச்சேரி மயானத்தில் அன்றிரவு தங்கினோம். மீண்டும் முன்னேறி இரவு 1மணியளவில் தனங்களப்புப் பகுதியைக் கைப்பற்றினோம். கடுமையான துப்பாக்கி வேட்டுகள், மற்றும் மோட்டார் குண்டுத் தாக்குதல்கள் நடந்தன. இறந்த படைச் சிப்பாய்களின் சடலங்களையும், காயப்பட்ட சிப்பாய்களையும் மீட்க முடியவில்லை. புலிகள் 5.0 ரக (பிப்ரி கலிபர்) துப்பாக்கிகள் இரண்டை இரண்டு கோணங்களில் வைத்துக் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். இதனால் காயப்பட்டவர்களையும் இறந்தவர்களின் சடலங்களையும் மீட்பதற்கு 2நாள்கள் போராட வேண்டியிருந்தது. பின்னர் பேருந்து ஒன்றில் அவர்களை ஏற்றி அனுப்பினோம். அதன் பின்னர் கேரதீவை நோக்கி முன்னேறியபோது தொலைத் தொடர்புக் கருவியின் உதவியுடன் எமது நகர்வுகளைத் துல்லியமாக அறிந்து எறிகணை வீசினார்கள்.

**உச்ச வெப்பத்தில் நகார்கோவிலில் சண்டை**

1999 நவம்பர் மாதத்தில் இயக்கச்சி, பளைப் பகுதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிய படை நகர்வு ஒன்றைப் புலிகள் முன்னெடுத்தார்கள். நாங்கள் நாகர்கோவில் பகுதியூடாக அதை எதிர்கொண்டோம். நாகர்கோவில் பகுதி நிழலில்லாத மணல் தரையாக இருந்தது. புலிகளுக்கும் படையினருக்கும் கவர் எடுக்கமுடியாத களநிலை காணப்பட்டது. கடும் வெப்பம், குடிநீர்த் தட்டுப்

கடுமையான துப்பாக்கி வேட்டுகள், மற்றும் மோட்டார் குண்டுத் தாக்குதல்கள் நடந்தன. இறந்த படைச் சிப்பாய்களின் சடலங்களையும், காயப்பட்ட சிப்பாய்களையும் மீட்க முடியவில்லை. புலிகள் 5.0 ரக (பிப்ரி கலிபர்) துப்பாக்கிகள் இரண்டை இரண்டு கோணங்களில் வைத்துக் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

# தாடித் தம்பிகளின் அடாவடி...!



சத்தியநாதன்

அதிகரித்த மதுப்பாவனை, போதைப் பொருள் பாவனை, போதைப் பொருள் கடத்தல், வாள்வெட்டு எனப் பல்வேறு உத்தரிப் புகளைப் போர் முடிவுற்ற பின்பான காலத்தில் தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றனர். இதில் ஈடுபடும் அடாவடிக் காரர்கள் வேற்று இனத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. வாள்வெட்டு, களவு, கொள்ளை, கொலை, அச்சுறுத்தல்கள் எனப் பலதையும் நிறைவேற்றி வந்த இந்த அடாவடிக் குழுக்களின் கவனம் தற்போது பெற்றோல் விடயத்தில் திசை திரும்பியிருக்கிறது. பெற்றோல் நெருக்கடி ஏற்பட்டு அதன் விலை 4 - 5 ஆயிரம் ரூபா வரை கள்ளச் சந்தையில் விற்கப்பட்டது. தாடி, தலைமுடி வளர்த்துக் கோவில்நூல்கள் பலவற்றைக் கட்டிக் கடுக்கன் அணிந்து எப்போதும் உரத்துத் தூஷணம் பேசும் பூதங்களாக உலாவரும் இந்தத் தாடித் தம்பியர்களின் சீவியத்துக்கு இது வாய்ப்பாகியது. பெற்றோல் மாபியாக்களாகினர். தமது அடாவடித் தனங்களைப் பெற்றோல் நிரப்புவதற்குப் பயன்படுத்தினர். இதனால் பாதிக்கப்பட்ட பொதுசனங்கள் ஏராளம்.

**தாடித் தம்பிகளின் தனித்துவம்**

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தாடித் தம்பிகளின் செயற்பாடுகளைத் தனித்து அடையாளம் கண்டுகொண்ட மக்கள் அவர்கள் நிலைகொண்டிருக்கும் பகுதியை நாசுக்காகத் தவிர்க்கின்றனர். அவர்களது சகவாசமே வேண்டாம் என்பவர்களாக வரிசையில் நிற்கின்றனர். கவனித்தும் கவனிக்காததுபோல அவர்களைக் கடக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியவர்களாக வரிசையில் நின்று நகர்கிறார்கள். தாடித்தம்பிகளுக்கு அண்மையாக வரிசையில் நிற்பவர்கள் அனுபவிக்கின்ற வதைகள் பல. வரிசை மெதுவாக நகரும்போது மோட்டார் சைக்கிளால் இடிப்பது, உராய்வடையுமாறு செய்வது, இருக்கையைக் காயப்படுத்துவது எனத் தாடித் தம்பிகளின் அட்டூழியங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். போதாக்குறைக்கு வாய்க்குள் வெற்றிலை, பாக்குப் போன்ற ஏதோ ஒன்றை மென்று அருகில் நிற்பவருக்கு அருவருப்பூட்டும் விதமாகக் கால்களின் ஓரமாகத் துப்புவது, அதைவிட அவ்வப்போது வாயிலிருந்து வெளிக்கிளம்பும் பிறப்புறுப்புச் சொற்களின் புனைவு எனத் தாடித் தம்பிகளின் கூட்டத்தை எரிபொருள் வரிசையில் தனித்து அடையாளம் காணும் விதத்தில் அவர்களின் தனித்துவம் மிக்க செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

பாடு நிலவின. நாகர் கோவில் பகுதியிலிருந்து புலிகளின் பகுதிக்குள் புகுந்து தாக்க முயன்றோம். புலிகள் தமது காவலரண் வேலிகளைத் தகரம், சீற், ஓலை, கிடுகு ஆகியவற்றால் மறைத்திருந்தார்கள். வெளியே நின்று பார்க்கும்போது எமக்கு எதுவும் தெரியாது. ஆனால், அவர்கள் சிறுதுவாரங்கள் மூலம் எமது நகர்வுகளை அவதானித்துக் கொண்டிருந்தார்கள். படையினர் பதுங்குகுழிகளில் இருந்து தலையை உயர்த்தினாலேயே பேதும், சினைப்பரால் தாக்குவார்கள்.

நிலமை இவ்வாறிருக்கும் போது ஓர் அடிகூட முன்னேற முடியாது என்பதை உணர்ந்து அவர்களின் எல்லையை உடைத்துச்சென்று 3கிலோமீற்றர் தூரத்தையாவது கட்டுப்பாட்டில் கொண்டுவரத் திட்டமிட்டோம். ஒரு நாள் இரவு மிக இரகசியமாக எமது கொமாண்டோ அணி உள்நுழைந்தது. புலிகளின் எல்லைக்குப் பின்னால் நிலையெடுத்தோம். வரைபடங்களைப் பார்த்து எவ்வாறு உள்நுழைவது என்பது ஒரு வாரகாலம் சிறப்புப் பயிற்சியாக மேற்கொண்டு உள்நுழைந்து 3கிலோமீPற்றர் தூரத்தைச் சென்றடைந்தோம்.

எமது அணியில் 8பேர் கொண்ட இரண்டு அணிகளும் சினைப்பர் சிப்பாய்கள் இருவர் என 18பேர் இருந்தோம். எமது அணியில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் எல்லைப் புறச் சிங்களக் கிராம இளைஞர்களாக இருந்ததால் எதற்கும் தயாரான உடற்பலமும், மனப் பலமும் உள்ளவர்களாக இருந்தனர். தாக்குதல் விடயத்தில் முழு இரகசியத்தைப் பேண வேண்டியிருந்தது. இந்தத் தாக்குதலுக்காக கடற் கழிமுகப் பகுதிக்குள்ளால் (கண்டல்பகுதிக்குள்ளால்) இறங்கினோம். சேற்றில் புதைந்துகொண்டு கடற் தாவரங்களையும் சமாளித்தவாறு 30கிலோ நிறையுடைய பொதி, துப்பாக்கிகளைக் காவிச் செல்வது மிகச் சிரமமாக இருந்தது. இதன் தொடர்ச்சியாக நாகர்கோவில் செம்பியன்பற்றுப் பாதையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுடவந்தோம்.

(தொடரும்)

**பெற்றோல் பெறுவதில் மும்முரம்**

தாடித் தம்பிகள் வேலை வெட்டிக்குப் போய் ஏதாவது வெட்டி விழுத்தும் நபர்களா? குடும்பப் பொறுப்புள்ளவர்களா? இவர்களில் தங்கி வாழ்வோர் எவராவது உள்ளனரா? யாரையாவது பராமரிக்கிறார்களா? ஏதாவது சமூகப் பணிகளில் ஈடுபடுகிறார்களா? என்று எவ்வகையில் தேடினாலும் ஒன்றுக்கும் உதவாத உதவாக் கரைகளாக இருந்து சமூகத்துக்குத் தொல்லையளிக்கும் நபர்கள் இவர்கள் என்பது தெரியவரும். இரைச்சலை ஏற்படுத்தும் பெரிய மோட்டார் சைக்கிள்களில் ஓடித் திரிந்து அடாவடித் தனங்கள் புரிவதாலும், கொள்ளை,



மிரட்டல், களவுகளில் ஈடுபடுவதாலும், இவர்களைப் பயன்படுத்தி நன்மை தேடுவோர் வழங்கும் பணத்திலும் வாழ்க்கையை ஓட்டி வந்த இவர்கள் இப்போது தன்னிச்சையாகவே பணம் தேட முற்பட்டதன் விளைவே இந்தப் பெற்றோல் வியாபாராம். தமது திருகுதாளங்களையும், அடாவடித் தனத்தையும் பெற்றோல் பெறுவதற்குப் பயன்படுத்தி அதில் வெற்றியைக் கண்டதும் அதைத் தொடர்கின்றனர்.

பெற்றோல் நிலைய உரிமையாளர்களை மிரட்டித் தாம் அனுப்புபவர்களுக்குப் 'புள் ராங்' பெற்றோல் அடிக்க வற்புறுத்துவது, வரிசையில் நிற்பவர்களை மிரட்டி வரிசைக்கு இடையே நுழைவது, பதிவுகளை மேற்கொள்ளக்கூடாது என்று மிரட்டி மீண்டும் மீண்டும் ஒரே மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோல் நிரப்புவது, வரிசையில் பக்க வாட்டில் அடுக்கியவாறு பெற்றோலுக்குக் காத்திருக்கும் மோட்டார் சைக்கிள்களை மேலும் நெருக்கி அதற்குள் தமது மோட்டார் சைக்கிள்களைச் சொருகுவது, இத்துப்போன பழைய மோட்டார் சைக்கிளை எடுத்துவந்து வரிசையில் நிறுத்தி இடம்பிடித்துப் பின்னர் அந்த இடத்தை விற்பது, கடைகளுக்கு முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்த அனுமதிக்காத கடைக்காரர்களுடன் முரண்பட்டு வரிசைக்கு இடையில் சொருகுவது எனப் பல அடாவடித்தனங்களைச் செய்தே இவர்கள் பெற்றோல் பெறுவதில் முன்னிலை வகிக்கின்றனர்.

**வேலை வெட்டியற்ற கூட்டம்**

தாடிக்காரத் தம்பிகள் எரிபொருள் வரிசையில் குறைந்தது 15பேர் வரையிலாவது தமது மோட்டார் சைக்கிள்களை வரிசைப்படுத்தி அங்கு முகாமிட்டிருப்பார்கள். பெற்றோல் வழங்கும் நாளில் தமது ஆட்களை அழைத்து இடையில்வேறு சொருகுகின்றனர். இதைப் பின்னால் நிற்பவர்கள் கேள்விக்குட்படுத்தினால், அவர் இதில நிப்பாட்டிப்போட்டுத்தான் போனவர் என்பதுபோல காரணம் ஏதாவது சொல்லிப் 'பேசாமல் பொத்திக்கொண்டிரு' என்று வெருட்டுகின்றனர். நிரப்பு நிலைய உரிமையாளர்கள், காவல்துறையினர், அரச அதிகாரிகளின் தயவு இந்தத் தாடிக்காரத் தம்பிகளுக்கு இருப்பதாவே தெரிகிறது. காரணம் இவர்களின் செயல்களை மேற்சொன்ன தரப்பினர் கண்டும் காணாததுபோல் இருக்கின்றனர்.

இதைவிட பெருந்தொகையில் பெற்றோல் தேவைப்படுவோர் இந்தத் தாடிக்காரத் தம்பிகளையே நாடுகின்றனர். அளவு, விலை என்பதையெல்லாம் அறிவித்தபின்னர், உரிய இடங்களுக்குத் தமது மோட்டார் சைக்கிள்களில் நிரப்பிச் சென்று வயர்களால் வெளியேற்றிக் கொடுக்கின்றனர்.

அனைத்து நிலையங்களிலும் பல கறல்பிடித்த, இத்துப்போன சைக்கிள்கள் நிரந்தரமாக நிறுத்தப்பட்டுத் தென்னோலை, சாக்கு, படங்கு போன்றவலற்றால் மூடப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பெற்றோல் நிரப்புவதில்லை. மாறாகப் பெற்றோல் அடிக்கும் நாளில் அவற்றை வைத்து இடம் பிடித்து அந்த இடத்தை விற்கின்றனர். அதை அரச அதிபரோ, காவல்துறையினர், படைத்தரப்பினரோ அகற்றுவதில்லை.

**மக்கள் பாதிக்கப்படக் காரணம்...!**

பெற்றோல் தட்டுப்பாடு நிலவுகின்ற இந்தக்காலத்தில் சாதரண மக்கள் பலருக்கு அது கொஞ்சமும் கிடைக்காமல் செய்திருக்கிறார்கள் இந்தத் தாடித் தம்பிகள். இறுதிப்போர் நடந்த 2009 காலப்பகுதியில் தாடித் தம்பிகளுக்குப் பத்து அல்லது அதற்குக் குறைவான வயதிருந்தது. போரோ, போர் இழப்புகளோ, அவ லங்களோ இவர்களுக்கத் தெரிந்தி ருக்கவில்லை. தற்போது தமிழர் பகுதியில் சட்டத்தை இவர்கள் கையிலெடுத்திருப்பது ஆரோக்கியமானதல்ல. இதுவரை பெற்றோல் பெற்றவர்களைவிட எரிபொருள் அட்டைக்கோ, கியூ. ஆர் முறையிலோ பெற்றோல் கிடைக்காது, பல தடவைகள் வரிசையில் காத்திருந்து இந்தத் தாடித் தம்பிகளின் அட்ரூழியத்தால் வீடு திரும்பியவர்கள் பலர் என்பது வேதனைக்குரியது.

**தாடி, தலைமுடி வளர்த்துக் கோவில்நூல்கள் பலவற்றைக் கட்டிக் கடுக்கன் அணிந்து எப்போதும் உரத்துத் தூஷணம் பேசும் பூதங்களாக உலாவரும் இந்தத் தாடித் தம்பியர்களின் சீவியத்துக்கு இது வாய்ப்பாகியது**

68



தர்மராசா

# சிறைக்குள்...

## கைதிகளின் செய்திகளை வெளியே கொண்டுசேர்க்கும் சிறை ஊழியர்கள்

சிங்களச் சிறைகளில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் பல்வேறு காலகட்டங்களில் உணவு தவிர்ப்புப் போராட்டங்களில் தமிழ் அரசியல் கைதிகள் ஈடுபட்டனர். அவர்களின் போராட்டங்கள் பற்றிய செய்திகளைச் சிறை நிர்வாகத்துக்குத் தெரியாமல் ஊழியர்கள் சிலர் இரகசியமாக வெளியே கொண்டுசென்று சேர்த்தனர். அந்த ஊழியர்களுக்கும், அந்தச் செய்திகளை உணர்வுபூர்வமாகச் செய்தியாக்கிய செய்தியாளர்களுக்கும் அந்தச் செய்திகளை வெளியிட்ட உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களுக்கும் எப்போதும் கைதிகள் நன்றிக்கடன்பட்டவர்கள்.

தமிழீழப் போராட்டத்தின் பின் விளைவுகளில் ஒன்று இலங்கையிலுள்ள பல சிறைகளில் தமிழ் இளைஞர், யுவதிகள் அரசியல் கைதிகளாக அடைக்கப்பட்டமை ஆகும். சிங்கள அரசுகள் தமிழ் மக்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தியதன் விளைவே தமிழர் தரப்பில் ஆயுதப்போராட்டமாக உருவானது. அந்த ஆயுதப்போராட்டத்துக்குத் துணைபோன குற்றச்சாட்டின்பேரில் அரசியல் கைதிகளாகத் தமிழர்கள் சிறை வைக்கப்பட்டு மோசமாக நடத்தப்பட்டனர்.

சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட எல்லா ஒடுக்குமுறைகளையும் தட்டிக்கேட்க, அல்லது நியாயம் பெற உணவு தவிர்ப்பு ஒன்றே கைதிகளிடம் இருந்த மிகப் பெரிய ஆயுதமாக இருந்தது. இது கைதிகளின் விடாப்பிடியான ஓர்மத்தாலும் துணிவாலும் எழுந்த ஓர் அர்ப்பணிப்பான அணுகுமுறையாகும். 1995 மார்ச் மாதத்திலிருந்து இற்றை வரை (2002) இந்த உணவுதவிர்ப்புப் போராட்டங்கள் முனைப்படைந்தன. அவ்வப்போது ஏதாவது ஒரு கோரிக்கையை முன்வைத்து அவை மேற்கொள்ளப்பட்டன.

கைதிகள் மீது வழக்குத் தொடுக்காதிருப்பது, விசாரணையின்றி வைத்திருப்பது, சிறைச்சாலை ஊழியர்களால் முரட்டுத்தனமாகத் தாக்கப்படுவது,

மிகத் தரம் குறைந்த உணவுகளை வழங்குவது, சிங்களத் தீங்கியல் கைதிகளுடன் சேர்த்துத் தடுத்து வைப்பது என இன்னோரென்ன அநீதிகளுக்கான தீர்வுகளை உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் மூலம் கைதிகள் சாதித்தார்கள். இந்தக் கடுமையான வன்மைப் போராட்டங்கள் பலவற்றில் ஈடுபட்டதால் பல நீண்டகாலக் கைதிகள் உடல் அவயவங்கள் செயற்பாடு திறன் குறைந்தவர்களாக மாறியிருந்தனர். பலருக்குக் கண்பார்வை இழக்குமளவுக்கு அந்த நிலை காணப்பட்டது.

உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காகக் கைதிகளால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் ஒருபோதும் முழுமையாகத் தீர்த்து வைக்கப்படுவதில்லை. ஆனால், அது சிறை நிர்வாகத்தின் அநீதிகளுக்கும், அரசின் மனித உரிமை மீறல்களுக்கும் பெரும் இடையூறாக இருந்தது. உணவு தவிர்ப்பிலிருக்கும்போது பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், மனித உரிமை அமைப்புகளும் கைதிகளைச் சந்திப்பதற்குக் களம் அமைந்தது என்பது மறுப்பதற்கில்லை. '

உணவு தவிர்ப்பை ஆரம்பிக்க முன்னர் கைதிகள் எழுமுத்துமூலம் சிறை நிர்வாகத்துக்கு அறிவிப்பது வழக்கம். என்ன காரணத்துக்காக உணவுதவிர்ப்பைச் செய்யவுள்ளோம் என்று அதில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும். அந்தக் கடிதம் கிடைத்ததும் குறிப்பிட்ட சிறைநிர்வாகம் கைதிகளுடன் பேசி அதைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கும். கைதிகள் அதற்கு இணங்காத பட்சத்தில் வெலிக்கடையிலுள்ள சிறைத் தலைமைக் காரியாலயத்துக்குச் சிறை நிர்வாகம் அறிவித்து அவர்களின் ஆலோசனைப்படி சிறைநிர்வாக மட்டத்தில் பல விடயங்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

ஒரு பிரச்சினை ஒரு நாளில் தோன்றுவதுமில்லை, ஒரு தீர்வு ஒரு நாளில் கிடைப்பதுமில்லை. அதுபோலவே உணவுதவிர்ப்புப் போராட்டங்களின் வெற்றி என்பது ஒரே நாளில் கைதிகளின் வயிறுகள் காய்வதால் பெறப்படுவதுமில்லை. பல வருடங்களாகப் பல்லாயிரம் கைதிகளின் வயிறுகள் பட்டினி கிடந்ததன் பின்னணியில் ஒரு சில உரிமைகளாவது நிலை நிறுத்தப்பட்டன. இலங்கையில் அரசியல் கைதிகளுக்கே இந்த நிலை இருக்கிறதென்றால் தமிழ்க் குற்றவியல் கைதிகளின் நிலை மிக மோசமானதாக இருக்கும்.

1995காலப்பகுதியில் காலை உணவு, தேநீருக்காக வரிசையில் நிற்கும்போது தமிழ்க் கைதிகளைச் சிங்களக் கைதிகள் அடிப்பார்கள் என்றும் அனுராதபுரச் சிறையில் இது மிகமோசமாக நடக்கும் என்றும் வெலிக்கடை, மகசீன் ஆகிய சிறைகளிலும் இந்த நிலை காணப்பட்டது என்றும் பழைய கைதிகள் சிலர் மூலம் அறிந்தேன். உணவு கொடுப்பதில் மிகவும் மோசமாக நடந்துகொண்டதாலும் சிறைச்சாலை உணவுதவிர்ப்புக்குச் சார்பாகச் செயற்பட்டாலும் கண்டபடி வேறு சிறைகளுக்கு மாற்றுவது நடந்தது. இதைத் தடுப்பதற்காகவெல்லாம் பல காலகட்டங்களில் பல்வேறு சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் உணவுதவிர்ப்பிருந்திருக்கிறார்கள். அதற்காகச் சிறைச்சாலை ஊழியர்களால் தாக்கப்பட்டுமுள்ளனர்.


1997இல் அனுராதபுரம் சிறையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்று தனியான ஒரு பகுதியைக் கேட்டு உணவுதவிர்ப்பில் ஈடுபட்டனர். சிங்களத் தீங்கியல் கைதிகளுடன் தமிழ் அரசியல் கைதிகளைச் சேர்த்து அடைப்பதால் தமிழ்ச்சிறுவர்கள் பலரை சிPங்களத் தீங்கியல் கைதிகள் தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுத்துவது, கொட்டியா என மிரட்டுவது, ஆகியவற்றுக்கு எதிராகவும் உணவு தவிர்பிபருந்து தமிழ்க் கைதிகளுக்குத் தனியான பகுதி ஒதுக்கிக் கொடுக்கப்படடது.

(தொடரும்)

# சிங்களப் படைகளை சிங்களவர் திட்டுவதன் பின்னணி...!

**நியூட்டன்**

'சிங்களப் படையினர் போர்க்குற்றம் புரிந்திருக்கின்றனர். கோத்தாபய ராஜபக்ச, இறுதிப்போரில் தமிழ் மக்களைக் கொன்ற குற்றவாளி' என்றெல்லாம் 'கோத்தா கோ ஹோம்' போராட்டத்தில் ஈடுபட்;ட இளைஞர்களில் பலர் இப்போது கருத்து வெளியிடுகிறார்கள். இந்தப் போராட்டத்துக்கு முன்னர் ஒருதடவைகூட அவர்கள் அப்படிப் பேசியதாகத் தெரியவில்லை. போர் முடிந்து 13ஆண்டுகள் கடந்துவிட்ட பின்பும்கூடச் சிங்களவர்களில் எவரும் இறுதிப்போர் பற்றியோ அதில் படையினர் இழைத்த அநீதிகள் பற்றியோ தகவல்களைச் சேகரித்து அறிக்கையாக்கி ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு வழங்கியிருக்கவில்லை. இனி மேலும் அறிவிக்கப்போவதுமில்லை. அவ்வாறாயின் இப்போது ஏனிவ்வாறாகக் கருத்துவெளியிடுகிறார்கள் என்று தேடிப்பார்த்தால், அது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காகக் அவர்கள் கொடுக்கின்ற குரல் என்கிறார்கள் சிலர், சிங்களப் படைகள் தம்மைத் தாக்கும்போதுதான் தமிழர்களை எவ்வாறு காட்டுமிராண்டித்



தனமாகத் தாக்கியிருப்பார்கள் என்பது அவர்களுக்குத் தெரிகிறது. இதனால்தான் அவர்களைத் திட்டுகின்றனர் என்கிறார்கள் வேறுசிலர். பொருளாதார நெருக்கீட்டால் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் சூழலே அவர்கள் இவ்வாறு பேசக் காரணம், அந்த நிலை மாறினால் அவர்கள் போராடப்போவதுமில்லை இவ்வாறாகப் பேசப்போவது மில்லை என்கிறார்கள் இன்னும்சிலர். எது எவ்வாறிருப் பினும் படைத்தரப்பைச் சிங்கள மக்கள் திட்டுகின்றனர் என்பதுதான் உண்மை. ஆனாலும் அந்தத் திட்டுதலால் படையினருக்கு ஏதாவது பாரதூரமான நிலமைகள் ஏற் படுமா? ஏற்படுத்துவார்களா? என்பதற்கெல்லாம் பதில் வெகு தொலைவில் இல்லை. படையினர் மீது போர்க் குற்ற நடவடிக்கைகள் ஏதாவது எடுப்பதற்கு தமிழர் தரப்பில் எவராவது முற்பட்டால் இப்போது திட்டித் தீர்ப் பவர்கள் தமது நிலைப்பாட்டிலிருந்து உடனடியாகத் திசை திரும்பிவிடுவதைக் காணமுடியும். அவர்களில் எவரும் படையினரைக் காட்டிக்கொடுக்க மாட்டார்கள். றையும்விட ரெலும்மைக்ரே வெளியிட்ட சனல் 4வின் படங்களிலுள்ள படையினரை அடையாளம் கண்டு படை நீதிமன்றத்தில் தண்டனை வழங்கயிருக்கவில்லை. ரெலும் மைக்ரேயின் ஆவணப் படம் சிங்கள மொழி பெயர்ப்புடன் அண்மையில் வெளியிடப்பட்டது. அப் போதுகூட சிங்களவர்களில் எவரும் இதுபற்றி வாய் திறக்கவில்லை. படையினரைத் தண்டனைக்குட்படுத்தும் விடயத்தில் பௌத்த பிக்குகள், சிங்களப் புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், படை உயரதிகாரிகள், கொமினிஸ்ட் கட்சிகள் என யாருமே முன்வரப்போவதில்லை.

**மக்களில் இருந்து அதிகாரத்தரப்பு வரை அரசியல் விழிப்புணணர்வு**

நாட்டிலுள்ள சக இனத்தவர்களைவிடச் சிங்கள அடித்தட்டு மக்களில் இருந்து அரசியல்வாதிகள், அதி காரிகள் வரை மேம்பட்ட அரசியல் விழிப்புணரர்வுடன் இருப்பதாவே தெரிகிறது. இறுதிப்போரின்போது போர்க்




குற்றம் நடந்தது என்று பலதடவைகள் கூறும் சரத் பொன்சேகா கூட ஐ.நா மனித உரிமை சபைக்கு ஒரு வாக்குமூலத்தை வழங்கத் தயாரில்லை. 30வருட ஆயு தப் போராட்டத்தில் கொல்லப்பட்ட படையினர், சிங்கள மக்களுக்குப் பிக்குகள், சிங்கள மக்கள் கொடுத்துவரும் முக்கியத்துவம் படையினரைத் திட்டும் இந்தச் சிறு தூசி யைக் கணத்தில் துடைத்தெறிந்துவிடும் தன்மை கொண் டது. போர் வெற்றியைக் கொண்டாடித் தீர்ப்பதிலும், போரில் கொல்லப்பட்ட தமது இனத்தவர்களை நினைந் துருகுவதிலும் காட்டும் கரிசனை இந்தத் திட்டுதலை விடவும் அதிகமானது - ஆழமானது.

**’படையினரைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்’**

படையினர் போர்க்குற்றம் புரிந்ததற்கான ஆதாரம் தன்னிடம் இருக்கிறது என்று ஊடகங்களிலும் நாடாளு மன்ற உரைகளிலும் முன்னாள் படைத் தளபதியும் போரை முன்னின்று நடத்தியவருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கூறியிருந்தார். ஆனால், இதுவரை அவர் படையினருக்கு எதிராக ஒரு வசனம்கூட எழுத்து மூலம் அறிவிக்கவில்லை. படையினரைக் காட்டிக் கொடுக்க மாட்டோம் என ராஜபக்சாக்கள் வெளிப்படை யாகவே பேசித்திரிந்தது யாவரும் அறிந்ததே. எல்லாவற்

05

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற் காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன்மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல் வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்க ளைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த் தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கி லுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இவ்வாரச் சொல்

## "இதண்டுங்கோ"

'இதண்டுங்கோ' என்கிற பேச்சாடல் யாழ்ப்பாணத்தவர்கள் மத்தியில் காணப்படுகிறது. ஊதாவது ஒரு விடயம் அல்லது வேலை பற்றி ஏற்கனவே கதைத்துத் தீர்மானித்திருந்தால் பின்னர் அதுபற்றிய சம்பாசனைத் தருணங் கள் வரும்போது நேரடியாக அதுபற்றிய சொல்லாடலைத் நேரடியாகத் தவிர்த்து வினைச் சொல்லாக இந்தச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

உதாரணத்துக்கு வயலில் அரிவு வெட்டும் வேலையை நாளை வெயி லுக்கு முன்பாகச் செய்வதற்குத் தீர்மானித்துக்கொண்டார்கள் என்று வைத் தால் மறுநாள் காலை அதைத் தொடங்கத் திட்டமிடப்பட்டிருப்பார்கள். அன்று காலையில் ஒருவர் மற்றவரைப் பார்த்து "நீங்கள் முன்னுக்குப்போய் இதண் டுங்கோ நான் வாறன்" என்பர். அதன் அர்த்தம் அரிவு வெட்டத் தொடங்கு ங்கோ என்பதே.

உதாரணமாக, இரண்டு பெண்கள் புட்டு அவிப்பதற்குத் திட்டமிட்டிருக் கிறார்கள் என்றால், 'நீங்கள் தண்ணியக் கொதிக்க வைச்சு இதண்டுங்கோ நான் மிச்சத்தைப் பார்க்கிறன்" என்று ஒருவருக்கு மற்றவர் சொல்வார். இப்படியாக "இதண்டுங்கோ" என்ற சொற்பதம் எல்லா வகை வேலைகளி லும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. "நீ பாத்து இதண்டன்"எனவும் பயன்படுத்தப்படுவதுண்டு. இதண்டுதல் என்பது ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்தல் என்ற நிலையாக ஏவப்படுகிறது.

### போராட்டக் களத்தில் தமிழ் உணர்வு

'கோத்தா கோ ஹோம்' போராட்டத்தின்போது காலிமுகத்திடலில் முள்ளி வாய்க்கால் நினைவேந்த லைத் தீபமேற்றியும் முள்ளி வாய்க்கால் கஞ்சி காய்ச்சிப் பகிர்ந்தும் செய்யப்பட்ட கூத்துகளில் சிங்கள மக்க ளில் பலர் ஈடுபடவில்லை. இதையெல்லாம் தமிழருக் குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம்போலத் தமிழ் ஊடகங்களும், அரசியல் புலத்தினரும் செய்தியாக்கி னாலும், சிங்கள மக்களில் பெரும்பாலானோர் இதைக் கண்டுகொள்ளவில்லை.

இறுதிப்போரில் பங்கு பற்றிக் குற்றங்கள் இழைத்த படைச் சிப்பாய்கள், தளப திகள் இன்னும் உயிருடன் உள்ளனர். அவர்களைக் காட்டிக்கொடுக்கும் எந்த நடவடிக்கையிலும் சிங்கள மக்கள் இறங்கப்போவ தில்லை. தாம் தற்போது முகம்கொடுக்கும் நெருக்கடி காரணமாகச் சிங்களப் படை யினர் தமிழரைக் கொடு மைப்படுத்தியதை ஓர் ஒப் பீடாக்குகின்றனரே தவிர அது தமிழ் மக்களுக்கு நன் மையான ஒன்றாக இருக் கப்போவதில்லை.

### அவசரகால, பயங்கரவாதத் தடைச்சட்டம்

நாட்டில் எவ்வளவோ நடடந்தேறிவிட்ட நிலையில் அவசரகாலச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் வாக் கெடுப்புக்கு விட்டபோது 120வாக்குள் ஆதரவாகவும் 63வாக்குகள் எதிராகவும் கிடைத்தன. 41வாக்குகள் அளிக்கப்படவில்லை என் பதுகூட அந்த வாக்குகள் 120 வாக்குகளுக்குச் சார் பானவை என்றே கொள்ள முடியும். எனவே சிங்கள மக்கள் படையினரைத் திட்டுவதென்பது பெரும் வெறுப்பாக எழுந்து தமிழ ருக்குச் சார்பானதாக மாற் றமடையும் என்பது பகற் கனவு. இதற்குப் போர் முடிந்த இவ்வளவு காலமும் தான் சாட்சி.


நட்சத்திரா



# ஏன்...? அப்டி...?

27

# பென்சில்களில் குறியீடுகள்




சிறுவயதிலிருந்தே பென்சில்களைப் பயன்படுத்தி வருபவர்களில் பலருக்கும், தற்போது பென்சில்களைப் பயன்படுத்தி வரும் சிறுவர்களில் பலருக்கும் பென்சில்களில் உள்ள குறியீடுகள் பற்றித் தெரிவதில்லை, புரிவதில்லை. பென்சில்களில் ஏன் அப்படி எழுதப்பட்டிருக்கின்றன..? அப்படி எழுதியுள்ளதன் அர்த்தம் என்ன? அந்த எழுத்துகளால் அப்படி என்ன தான் சுட்டிக்காட்டப்படுகிறது? என்றெல்லாம் தேடிப்பார்ப்பதில்லை.


"பென்சில் ஒன்று தாங்கோ" என்று கேட்கும் போது கடைக்காரர் வழங்கும் பென்சிலை வாங்கும் பழக்கமே பலருக்கு இருக்கிறது. தமக்கு எந்த வகையான பென்சில் வேண்டும் எனக் கோரும் பழக்கம் பலருக்கு இல்லை. பென்சில்களில் வகைகள் இருக்கின்றன என்று தெரியாமல்கூடப் பலர் இருக்கின்றனர். அட்லஸ், நடராஜா என்று இங்குள்ள சில தயாரிப்பு நிறுவனங்களின் பெயர்களைச் சொல்லி வாங்கும் பழக்கம் இருக்கும் அளவுக்குப் பென்சிலின் வகையைக் கேட்டு வாங்கும் பழக்கம் இருப்பதில்லை. எழுத்துத் தேவைக்குப் பயன்படும் எச்.பி வகை பென்சில்களையே பொதுவாகப் பலரும் பயன்படுத்துவதால் விற்பனைதாரர்களும் அதையே வழங்கப் பழக்கப்பட்டிருக்கின்றனர். எழுத்துத் தேவைக்கு மாத்திரமே பொதுவாகப் பலரும் பென்சில் வாங்குவதால் வேறு வகைப் பென்சில்கள் குறித்து அலட்டிக் கொள்ளவேண்டிய தேவையும் பலருக்கு இருப்பதில்லை. அதைத் தாண்டி ஒருசிலர் பென்சில்களின் வகைகளை அறிந்து கேட்டு வாங்குகின்றனர். ஓவியம் பயிலும் மாணவர்கள், ஓவியர்கள், வரைபடக் கலைஞர்கள், பொறியியலாளர்கள், மற்றும் சிலர் இதற்குள் அடங்குகின்றனர்.

பென்சில்கள் அவற்றின் கூர்மையின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பென்சில்களின் தலைப்பகுதியில் அல்லது இடைப்பகுதியில் அந்தப் பென்சிலின் வகை குறித்த அடையாளம் இடப்பட்டிருக்கும். துவே அவற்றின் கருமையையும் அவை எழுதும் அல்லது வரையும் பரப்பின் துல்லியம் மற்றும் விசாலத்தையும் தீர்மானிக்கின்றது.

இதில் எச்.பி (HB) என்று குறிப்பிடப்பட்டிருப்பது நடுத்தரப் பென்சில். இதன் கூர்மை கடினமான கறுப்பாக (HARD BLACK) இருக்கும் எழுத்துத்தேவைக்குப் பலரும் பயன்படுத்துவது இதைத்தான். இந்த எச்.பியிலிருந்து கறுப்பின் தன்மை கூர்மையில் அதிகரித்துச்செல்லும்

# "இருள் நீர்" (dark waters)

## கதையல்ல நிஜம்




'நொன் ஸ்ரிக்'' பாத்திரங்கள் பற்றி உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எண்ணையில்லாவிடினும் பெரிக்கலாம்...! உணவு ஒட்டிக்கொள்ளாது. கருகிவிடாது, அடிப்பிடிக்காது. சமைக்கின்ற உணவு ஒட்டிக்கொள்ளாத மேற்பரப்புகளைக் கொண்ட இந்த வகைச் சமையல் பாத்திரங்களைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. உங்கள் வீடுகளிலும் வாங்கி வைத்து அதன் பயனை அனுபவிப்பவர்களாக நீங்கள் இருப்பீர்கள். தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக இந்த ''நொன் ஸ்ரிக்'' வகைச் சமையல் பாத்திர உருவாக்கத்தில் புகுத்தப்பட்டுள்ள இரசாயனக் கலவையானது சமையல் பாத்திரங்களில் மாத்திரம் பயன்படுத்தப்படுவதில்லை. துணிகள் தயாரிப்பு, மூக்குக் கண்ணாடி வில்லைகள் தயாரிப்பு, உராய்வு நீக்கிகள் தயாரிப்பு,




ஒரு வரிசையும், கடினத்தின் தன்மை அதிகரித்துச் செல்லும் எதிர் வரிசையும் என இரண்டு பிரிவுகளாகப் பென்சில்களை வகைப்படுத்தலாம். அதாவது எச்.பிக்கு மேற் புறமாகக் கருமை அதிகமுள்ள பென்சில்களை அடுக்கி வேறுபாட்டை அறிவது சுலபம். அவை மேலே செல்லச் செல்லக் கூர்மையின் கருமை அதிகரித்துச் செல்பனவாக இருக்கும். அது இலக்கங்கள் மூலம் குறிப்பிடப் பட்டிருக்கும். அதாவது, B, 2B, 3B, 4B, 5B, 6B, 7B, 8B, 9B என ஒன்பது வரையிலான இலக்கங்களுடன் BLACK (கறுப்பு) என்கிற அவற்றின் கூர்மையின் கருமைப் பரப்பு அதிகமாகிச் செல்லும். இதற்கு மறுதலையாகக் கருமை கடினமடைந்து செல்லும் பென்சில்களை வகைப்படுத்தலாம். அவை 2H, 3H, 4H 5H 6H, 7H 8H, 9H என ஒன்பது வரையான இலக்கங்களுடன் ஆங்கில எழுத்தான H ஐயும் (கடினம் - HARD) கொண்டிருக்கும். இவ்வாறே பென்சில்கள் வகைப்படுத்தப்படுகின்றன. தமது தேவைக்கு ஏற்ப பென்சில்களை இந்த அடையாளங்களை - குறியீடுகளைச் சொல்லிக் கேட்டுவாங்க முடியும். பென்சில்களில் குறியீடுகள் ஏன் உள்ளன....? ஏன் அப்படிக் குறிக்கப்பட்டுள்ளன...? என்றெல்லாம் தேடியபோது எமக்குக் கிடைத்த பதில் இதுதான். மேலதிகமாக அறிவதற்கு ஏன்... அப்படி... என்று நீங்களும் சற்றுத் தேடிப்பார்க்கலாம்...!

கட்டடத் தொழில் எனப் பல துறைகளில் பயன்பாட்டில் உள்ளது. காபன் சேர்வையால் ஆன அந்த இரசாயனக் கலவையை அமெரிக்க நிறுவனம் ஒன்றுதான் கண்டுபிடித்தது. அந்தக் கலவை அந்தத் தயாரிப்பு நிறுவனத் தொழிற்சாலையின் சுற்றுச் சூழலில் ஏற்படுத்திய விளைவுகளால் விவகாரம் நீதிமன்றப் படியேறி அதற்காகப் பெருமளவு தண்டப்பணத்தையும் செலுத்தியிருக்கிறது அந்த நிறுவனம். தொழிற்சாலைச் சுற்றுச்சூழலுடன் மாத்திரம்தான் அந்த ஆபத்துகள் நின்றுவிடவில்லை என்பதை விளக்கும் படம்தான் 2019ஆம் ஆண்டில் வெளியான ''இருள் நீர்' (dark waters). நொன் ஸ்ரிக் வகைப் பாத்திரங்கள் உலகம் முழுதும் பரவிச் சமையலறைகளில் இருந்துகொண்டு உயிர் பறிக்கும் வேலைகளை எவ்வாறு அமைதியாகச் செய்கின்றன என்பது பற்றிச் சிந்திக்க வைக்கும் கதை படத்தினுடையது. அந்த இரசாயனச் சேர்க்கை அமெரிக்காவின் மாநிலம் ஒன்றிலுள்ள மக்களைப் பாதித்த உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டிருக்கிறது.

**தொழிற்சாலைச் சுற்றுச்சூழலுடன் மாத்திரம்தான் அந்த ஆபத்துகள் நின்றுவிடவில்லை என்பதை விளக்கும் படம்தான் 2019ஆம் ஆண்டில் வெளியான "இருள் நீர்" (dark waters)**



**கதை**

நேர் கொண்ட பார்வை படச் சட்டத்தரணிப் பாத்திரமான அஜித்தைப்போலவோ, ஜெய்பீம் பட சூர்யாவைப்போலவோ இல்லாமல் பணம் சம்பாதிப்பதற்காக வழக்குகளில் வாதடும் சட்டத்தரணியாக இருக்கிறார் மார்வெல் கலையகத்தின் ஹல்க் சுப்பர் ஹீரோவாகப் பார்த்துப் பழக்கப்பட்ட மார்க் ரபாலோ. அவரது பாட்டி அனுப்பி வைத்தார் என்று சொல்லிக்கொண்டு அவரைத்தேடி விவசாயி ஒருவர் வருகிறார். அவரது மாடுகள் தொடர்ந்து இறந்து வருகின்றன என்றும் தனது கிராமத்திலுள்ள மனிதர்களுக்கும் நிறைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றும் அதற்கு அங்குள்ள நிறுவனம் ஒன்றுதான் காரணம் என்றும் சொல்கிறார்.

தனக்குத் தெரிந்தவர்களைத் தொடர்கொண்டு அந்தக் கிராமத்தின் தண்ணீர், சுற்றுச்சூழல் பற்றி ஆராய்கிறார் ரபாலோ. அவற்றில் ஒரு பிரச்சினையும் இல்லை என்பதும் அதைக் கைவிட்டுவிடுகிறார். ஆனாலோ அந்த விவசாயி மீண்டும் வந்து அங்கு பிரச்சினை இருக்கிறது என்று விளக்கி ரபாலோ சிறுவயதில் அந்தக் கிராமத்தில வாழ்ந்த ஒளிப்படங்களைக் காட்டுகிறார். அதற்குப் பின்னர் நேரடியாகக் களத்தில் இறங்கும் ரபாலோ அங்கு விலங்குகள், மனிதர்கள் பாதிக்கப்பட்டிருப்பதையும் அதற்குக் காரணம் அங்குள்ள தொழிற்சாலை வெளியேற்றும் கழிவு என்றும். அந்தக் கழிவால் அந்த ஊர் மாத்திரமல்ல முழு அமெரிக்காவும், ஏன் நாம்





கூடப் பாதிக்கப்படுகிறோம் என்றும் கண்டறிந்து அந்த நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடுக்கிறார். அந்தக் கழிவு என்ன? அதனால் உண்டாகும் பாதிப்புகள் என்ன? அதைத் தட்டிக்கேட்க முற்படுகின்ற ரபாலோ எதிர்நோக்கும் பிரச்சினைகள், நெருக்கடிகள், ஆபத்துகள் என்னென்ன, முடிவு என்ன, தீர்ப்பு எப்படி அமைந்தது என்பதையெல்லாம் விறு விறுப்பாகச் சொல்கிறது மீதிக்கதை.

**நிஜம்**

உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், ஆவணப் படச் சாயலை ஒத்திருந்தாலும் கதையின் போக்கால் ஈர்க்கிறது படம். 2016இல் நியூயோர்க் டைம்ஸ் இதழில் நதானியேல் ரிச் என்பவர் எழுதிய The Lawyer Who Became DuPont's Worst Nightmare' கட்டுரையை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கதை டுபொண்ட் நிறுவனத்துக்கு எதிராக 20 வருடகாலச் சட்டப் போராட்டத்தை நடத்திய சட்டத்தரணி ஒருவரை மையப்படுத்தியே படமாக்கப்பட்டுள்ளது. 'டுபொன்ட்' என்பது இற்றைக்கு உங்கள் சமையலறைகளில் இருக்கின்ற நொன் ஸ்ரிக் பாத்திரங்களில் பயன்படும் ரெவ்லொன் (Teflon) என்கிற இரசாயனக் கலவையைக் கண்டுபிடித்த நிறுவனம். 1938இல் முதன்முதலாக டுபொண்ட்டின் ஆய்வுகூடம் ஒன்றில்தான் தற்செயலாக அது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் விபரீதங்களைப் பேசுகிறது படம். இதை இயக்கியிருக்கிறார் டோட் ஹெய்ன்ஸ்.

# உங்கள் செல்பேசி எண்ணின் விலை எவ்வளவு தெரியுமா?

**தனிநபர் குறித்த தகவல் என்பது தங்கம், வைரம், வைடூரியங்களை விட விலை மதிப்பற்றது. அதற்கு விலையே இல்லை.**

ஹரி



ஒன்லைன் மோசடிகளை வாசிக்கும் நண்பர்கள் தவறாது எழுப்பும் ஒரு கேள்வி, "எப்படி என்னுடைய முக்கியத் தகவல்கள் மோசடியாளர்களுக்குக் கிடைக்கின்றன?" இதே கேள்விதான் மோசடிக்கு ஆளானோரிடத்திலும் எழுகிறது. ஒரே அழைப்பு. ஓ.டி.பி. (ஒரு தடவை மட்டும் அனுப்பப்படும் கடவுச் சொல்) கூட சொல்லவில்லை. ஆனால், பணம் கண்முன்னே பறிபோகிறது. என்ன மாயம் இது?

சாதாரணமாக நம் வங்கிக் கணக்கை நாம் அணுகுவதற்கே பயனர் பெயர், கடவுச்சொல், புதிய கணிப்பொறி / மொபைலில் இருந்து அணுகினால் உங்களின் பிறந்த ஊர் எது போன்ற பாதுகாப்புக் கேள்விகள், இவையெல்லாம் கடந்து பணப் பரிமாற்றத்தின் போதான இறுதிக்கட்ட ஓடிபி என ஏழு கடல் ஏழு மலை தாண்டி வைக்கப்பட்டிருக்கும் என் சேமிப்பை எப்படி மோசடியாளர்கள் இவ்வளவு எளிதாக அபகரிக்கிறார்கள்? எதையுமே நான் அழைப்பின்போது சொல்லவே இல்லையே? பிறகு எப்படி இது தெரிவதற்கு சாத்தியம்!

தொழில்நுட்பத்தில் எதுவும் சாத்தியம். தனிநபர் குறித்த தகவல் என்பது தங்கம், வைரம், வைடூரியங்களைவிட விலை மதிப்பற்றது. அதற்கு விலையே இல்லை.

ஒரு பெண் தங்கள் அரச தலைவராக வர வேண்டும் என்பது அமெரிக்கப் பெண்களின் நூற்றாண்டுக் கனவு; காலம் அதற்கான அனைத்து வாய்ப்புகளையும் ஹிலாரி கிளின்டனுக்கு அளித்தது. நம்பிக்கையுடன் தனது வெற்றி உரையைக்கூட தயாரித்து வைத்திருந்தார் ஹிலாரி. தேர்தலுக்கு இன்னும் ஐந்து நாட்கள் இருக்கும் போது அவரது இரகசிய மின்னஞ்சல்கள் குறித்த தகவல் கசிவு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

ஹிலாரி, அவரது முதன்மை உதவியாளர் ஹூயுமா, இத்தகவல் கசிவுக்கு காரணமான அவரது கணவர் வெய்னர் ஆகியோரை 'எஃப்பிஐ' (FBI) கைதுசெய்து விசாரிக்கிறதா என ஆதாரமற்ற ஒரு தகவல் தொடர்ந்து வலைதளங்களில் பேசுபொருளானது. இதன் விளைவு, கனியத் தொடங்கிய நூற்றாண்டுக் கனவு அமெரிக்கப் பெண்களின் கைகளுக்கு கிட்டவில்லை.

இதுபோல பல ராஜாங்கங்களை வீழ்த்தவும், போர்களைத் தொடங்கவும், வரலாற்றை மாற்றி எழுதவும் வல்லது தனிநபர் குறித்த ஒரு தகவல். சரி, அரச குடும்பங்களை விடுங்கள், யாழ்ப்பாணவாசி நான், என் தகவல் எனக்கே எந்தப் பெறுமதியுற்றது, ஆனால் இதை இவர்கள் எப்படி எடுக்கிறார்கள், இதை வைத்து என்ன செய்கிறார்கள்?

பத்து வருடங்கள் முன்புவரை இலங்கையில் இணையம் இவ்வளவு பரவலாக இல்லை. திறன்பேசி (ஸ்மார்ட்போன்) கூட தனது மழலைப் பருவத்தில் இருந்தது. அப்போதெல்லாம் ஷாப்பிங் மால், திரையரங்கம் என எங்கு சென்றாலும் அதிர்ஷ்ட குலுக்கல் என ஒரு கூப்பனைக் கையில் கொடுத்து நமது பெயர், முகவரி, மொபைல் எண், இன்னபிற சில கேள்விக்கான பதில்கள் ஆகியவற்றை எழுதி ஒரு பெட்டியில் போடச் சொல்வார்கள். அதிர்ஷ்டம் வருமா தெரியாது. ஆனால், அதன் பிறகு நிறைய டெலிமார்க்கெடிங் அழைப்புகள் வரும்.

இது போலவே மொபைல் ரீசார்ஜ் கடைகள், தொலைத்தொடர்பு நிறுவனத்தில் பணியாற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் ஆகிய வகைகளில் இருந்து தனிநபர் குறித்த விவரங்களைப் பெறும் டேட்டா நிறுவனங்கள், செயல்பாட்டில் இருக்கும் ஆயிரம் பேரின் மொபைல் எண், பெயர் விவரங்கள் என இவை ஒரு கணிசமான தொகைக்கு டெலிமார்க்கெடிங் நிறுவனங்களிடம் விற்றுவிடும்.

வாங்குபவர்களுக்கு இது ஒரு தங்கம்போல, தொடர்பில் இல்லாத எண்கள், காலாவதியான எண்கள் ஆகியவற்றை அழைத்து நேர விரயம் ஆவதைத் தவிர்த்து, செயல்பாட்டில் இருக்கும் எண்களை மட்டுமே அழைப்பதால் நூறு சதவீதம் அவர்கள் உழைப்பு, வியாபாரமாக பயனளிக்கும்.

ஒரு பெயர், மொபைல் எண்களைப் பெறுவதற்கே இவ்வளவு உத்திகளைக் கையாண்டு, பணம் பார்த்த நிறுவனங்கள், இணையத் தொழில்நுட்பம் இவ்வளவு பரவியிருக்கும் காலத்தில் சும்மா இருக்கும் என நினைக்கிறீர்களா? மேற்சொன்ன அதிர்ஷ்ட குலுக்கல், ரீசார்ஜ், என்பவற்றைவிட இப்போது உங்கள் மொபைலில் இருக்கும் ஒரே ஒரு செயலி அதிக தகவலைக் கொண்டிருக்கும்.

அதுபோலவே, யாழ்ப்பாணத்தில் வீற்றிருக்கும் நம் தகவல் நமக்கேகூட பயன்படாமல் போகலாம். ஆனால், வியாபாரம் என வந்துவிட்டால் அனைவரும் வாடிக்கையாளர்களே. வாடிக்கையாளர் அரசனுக்கு நிகரானவர், ஆகவே நம் தகவலும் ஹிலாரிக்கு ஒன்றும் குறைந்ததில்லை.

தகவல் கசிவில் முதலில் இருக்கும் நாடு அமெரிக்கா. தனது மக்கள் குறித்த **200** மில்லியன் பயனர் தகவல்களை அது இழந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து ஈரான், பிறகு மூன்றாவது இந்தியா (**86** மில்லியன் பயனர் தகவல்கள்).



**எப்படி நமது பயனர் தகவல்கள் இணையத்தில் கசிகின்றன?**

இதற்கான முதன்மைக் காரணம், பயனரின் தகவல்களை வைத்திருக்கும் நிறுவனங்கள் பலவீனமான இணைய / கணினிக் கட்டமைப்பைக் கொண்டிருந்தால், ஹேக்கிங் போன்ற இணையத் தாக்குதல்களால் நிறுவனத்தின் கைவசம் இருக்கும் அனைத்துத் தகவல்களும் வீதிக்கு வந்துவிடும்.

உதாரணத்திற்கு பீட்சா விற்பனை செய்யும் டோமினோஸ் நிறுவனம், தனது இந்தியப் பயனர்களின் தகவல்களை சமீபத்தில் இழந்தது. இதை எடுத்த ஹேக்கர் டார்க் வெப் தளத்தில் பொதுவில் இதை வெளிப்படுத்திவிட்டார். உங்கள் மொபைல் எண்ணைக் கொண்டு தேடினால் போதும். உங்கள் வீட்டின் முகவரி, பெயர், மின்னஞ்சல் முகவரி, எத்தனை ரூபாய்க்கு பீட்சா வாங்கினீர்கள், எந்த நேரத்தில் வாங்கினீர்கள் என முதன்மைத் தகவல்கள் கிடைத்துவிடும். வாங்கியதற்குப் பயன்படுத்திய க்ரெடிட் / டெபிட் அட்டை உபரி விவரங்களையும் வெளியிடுவேன் என ஹேக்கர் இன்னும் டொமினோஸை மிரட்டிவருகிறான்.

ஒரு பீட்சா நிறுவனத்திடமே நம்மைப் பற்றிய தகவல் இவ்வளவு இருக்கிறதே, இதுவே ஒரு வங்கி தனது பயனர் தகவல்களை இழந்தால் என்ன ஆகும்? நமது பெயர், முகவரி, இன்ன பிறவைகள் அடங்கிய முழு பயனர் விவரம், க்ரெடிட் / டெபிட் அட்டை விபரங்கள், மூன்றிலக்க சிவிவி எண், செல்லுபடி காலம், நமது லோன் தொகை, சேமிப்புத் தொகை, ஏடிஎம் பின் எண், க்ரெடிட் லிமிட், தினசரி பரிவர்த்தனை அளவு என அனைத்தையும் ஒரு எக்செல் ஷீட்டில் இட்டு, டார்க்வெப் சந்தைகளில் விற்றுவிடுவார்கள். அதுவும் எப்படி தெரியுமா?

ரூ.**10,000** சேமிப்பு வைத்திருக்கும் நூறு பயனாளர் விபரம் - விலை **10** டாலர்.

ரூ.**10** லட்சம் சேமிப்பு வைத்திருக்கும் **10** பயனாளர் விபரம் - விலை **50** டாலர்.

ரூ.**50** லட்சம் க்ரெடிட் லிமிட் வைத்திருக்கும் **5** ப்ரீமியம் கடன் அட்டைகள் (சிவிவி, பின் எண், செல்லுபடி காலம் உட்பட) - விலை **100** டாலர்.

காய்கறிச் சந்தைபோலக் கூறு வைத்து வகைப்படுத்துவார்கள். பிறகு, 'நீங்கள் வாங்கும் அனைத்தும் நூறு சதவீதம் செயல்பாட்டில் இருக்கும் கணக்குகள்... உங்கள் அடையாளத்தை மறைத்து கிரிப்டோவில்கூட வாங்கலாம்... இச்சலுகை இன்றே கடைசி!' எனக் கண்கவரும்படி விளம்பரம் செய்வார்கள்.


எப்படி பத்து வருடங்களுக்கு முந்தைய டெலிமார்க்கெட்டிங் நிறுவனங்களுக்கு செயல்பாட்டில் இருக்கும் மொபைல் எண் தகவல் உதவியதோ, அதுபோலவே மோசடியாளர்கள் மற்றும் ஹேக்கர்களுக்கு இவை

மோசடியை வெற்றிகரமாக நிகழ்த்திட மிகவும் உத விடும்.

ஆக மோசடியாளர்களது தேவையெல்லாம் உங்க ளிடம் இருக்கும் ஓடிபி எண், அதுவே பொக்கிஷத்தைத் திறப்பதற்கான கடைசிச் சாவி. அதை எப்பாடுபட்டாவது பெற்றுவிட்டால் அதைக் கொண்டு கடவுச்சொல்லைக்கூட மாற்றிவிடலாம். ஆகவே ஒரு மோசடி அழைப்பு வரு கிறதென்றால் நம் குறித்த 99% தகவல்கள் ஏற்கனவே அவர்வசம் இருக்கிறதென்று பொருள் எந்தச் சூழ்நிலையி லும் உங்கள் வாழ்நாள் சேமிப்பைக் காக்கும் கடைசி சாவியை அவர்களிடம் தந்துவிட வேண்டாம். தேவை யில்லாத செயலிகளை மொபைலில் நிறுவாதீர்கள்.

'இதை கிளிக் செய்யுங்கள், அதைத் தரவிறக்குங்கள், போனஸ், இலவசம், கடைசி நாள்' என்றெல்லாம் வரும் கண்கவர் குறுஞ்செய்திகளைச் சட்டையே செய்யாதீர்கள். அடுத்த முறை அழைப்பு வந்தால், 'இது எனது பழைய முகவரி தம்பி, புதிய முகவரியை வாங்கிவிட்டு பேசுங் கள்!' என அழைப்பைத் துண்டித்துவிடுங்கள்.

---



# பி.சி.ஓ.எஸ்: இளம்பெண்களின் பிரச்சினை!

கு.கணேசன்

அண்மைக் காலமாக, மக்கள் மத்தியில் பரவலாகிவரும் மருத்துவச் சொற்களில் 'பி.சி.ஓ.எஸ்.' (PCOS) முக்கியமானது. அதிலும் திருமணத்துக்குக் காத்திருக்கும் பெண் களுக்கும், அண்மையில் திருமண மான பெண்களுக்கும் இந்த வார்த்தை தெரிந்திருக்கிறது. அவர்களின் பெற் றோருக்கும் இந்தப் பெயர் அத்துப் படி!

**அது என்ன 'பி.சி.ஓ.எஸ்.'?**

'பாலிசிஸ்டிக் ஒவேரியன் சின்ட் ரோம்' (Poly Cystic Ovarian Synd rome). இதன் சுருக்கப் பெயர்தான் 'பி.சி.ஓ.எஸ்.' தமிழில் சொன்னால், சூலக நீர்க்கட்டி. 'கட்டி' என்றதும் பயந்துவிடவேண்டாம். பெண்களுக்கு ஏற்படும் கட்டிகளில் ஆபத்து இல் லாத கட்டி இது.

இருபது வருடங்களுக்கு முன்பு வரை பரம்பரை காரணமாக எங்கோ, எவருக்கோ ஏற்படும் 'பி.சி.ஓ.எஸ்.', தற்போதைய வாழ்க்கைமுறை மாற் றங்களால், 'இது யாருக்குத்தான் இல்லை?' என்று கேட்கும் நிலை மைக்கு மோசமாகிவிட்டது.

**உடற் பருமனைக் கட்டுப்படுத் தாமல் திருமணம் செய்து கொள்ளும் பெண்களுக்குக் குழந்தை உண்டாவது தடைப்படும்.**

புள்ளிவிவரப்படி சொன்னால், திரு மண வயதில் உள்ள பெண்களில் 20% பேருக்கு இது இருக்கிறது. திருமண மான பெண்களுக்குக் குழந்தை 'தங் காமல்' போவதற்கு இதுதான் முக்கிய காரணம். குறிப்பாக, இது உடற்பருமன் உள்ள பெண்களைத்தான் அதிகமாகக் குறிவைக்கிறது.

கருப்பையின் இரண்டு பக்கமும் பாதாம் பருப்பு அளவில் தலா ஒரு சூலகம் (Ovary) இருக்கிறது. பருவ மான பெண்களுக்கு மாதாமாதம் 'விலக்கு' ஏற்படுவதற்கும், மணமான பெண்களுக்குக் குழந்தை உண்டாவ தற்கும் சினைமுட்டையை (Ovum) மாதம் ஒன்று வீதம் உருவாக்கித் தரும் அட்சயப் பாத்திரம் இது.

சூலகச் சுரப்பிகள் பெண்ணுக்கான ஈஸ்ட்ரோஜென், ப்ரோஜெஸ்டிரான் ஹார்மோன்களைச் சுரப்பதோடு, ஆணுக்கான ஆன்ட்ரோஜெனையும் சிறிதளவு சுரக்கின்றன. அளவோடு கொட் டும் குற்றால அருவியில் குளிப்பது சுகமாக இருக்கும்.; ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவியில் குளித்தால் ஆபத்துதானே வரும்? அதுமாதிரி உடற்பருமன் உள்ள பெண்களுக்கு ஆன்ட்ரோஜென் ஹார்மோன் அள வில்லாமல் சுரக்கும்போது பி.சி. ஓ.எஸ். 'ஆஜர்' ஆகி பிரச்சினை செய்கிறது.

**நீர்க்கட்டியின் ஊற்றுக்கண்!**

இன்றைக்குப் பாடசாலைகளில் விளையாட்டுக்கு முக்கியத்துவம்

கொடுப்பது குறைந்துவிட்டது. படிக்கும் காலத்தில் தொடங்கும் இந்தப் பழக்கம் வேலைக்குச் செல்லும் போதும் தொடர்கிறது. படிக்கும் காலத்திலாவது நடந்து செல்வது, சைக்கிள் ஓட்டுவது எனச் சில பழக்கங்கள் இருக்கும். வேலைக்குச் சென்றதும், அவையும் மறைந்துவிடும். உடற்பயிற்சிக்கு நேரமே இருக்காது.

அடுத்து, அவர்கள் அலுவலகத்தில் நீண்ட நேரம் அமர்ந்தே வேலை செய்யும்போது, உடல் உழைப்பு குறைந்து போகிறது. போதாக்குறைக்கு கடைச் சாப்பாடு, நேரங்கெட்ட நேரத்தில் நொறுக்குத் தீனிகள், இரவில் துரித உணவுகள் என எல்லாமே அணி சேர்ந்து இவர்களுக்கு உடல் எடையைக் கூட்டிவிடுகின்றன. இதுதான் சூலக நீர்க்கட்டிக்கு ஊற்றுக்கண்ணா கிறது.

மேலும், அலுவலகத்தில் 'வொர்க் ஹாலிக்'காக இருப்பது, தொழில் போட்டியில் வெற்றிபெறப் புதுப்புது யோசனைகளைச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம், சக்திக்கு மீறிய இலக்குகள், அவற்றை எட்டுவதற்கு மேற்கொள்ளும் தூக்கம் இல்லாத வாழ்க்கை, அவற்றால் ஏற்படும் மன அழுத்தம், அதைக் குறைக்க சிகரெட், மது, வார இறுதிக் கொண்டாட்டம் என இன்றைய இளம் பெண்களின் வாழ்க்கைமுறை நிறையவே மாறிவிடுகிறது. இதனால், அவர்களுக்குச் சுரக்கிற ஹார்மோன்களுக்குப் 'போதை' ஏறிவிடுகிறது. அவை சுயமிழந்து சீரில்லாமல் சுரக்க, அது சூலக நீர்க்கட்டிக்கு உரமிடுகிறது.

**என்னென்ன பிரச்சினைகள்?**

பொதுவாகவே, பெண்களுக்குச் சூலகத்தைச் சுற்றி தேனடைபோல் ஆயிரக்கணக்கான சினைமுட்டைகள் முதிர்ச்சி அடையாமல் இருக்கும். இவற்றில் சில அவ்வப்போது நீர்க்கட்டிகளாகத் தோன்றி மறையும். இந்த நீர்க்கட்டிகள் 12க்கும் மேல் இருந்தால், அதை பி.சி.ஓ. எஸ். என்கிறோம்.

இந்தக் கட்டிகள் அடுத்தடுத்து அதிகமாக ஆன்ட்ரோஜெனைச் சுரக்கவைப்பதால், இந்தப் பெண்களுக்கு ஆண்தன்மை அதிகரிக்கிறது. முகத்திலும் உடலிலும் தேவையில்லாமல் முடிகள் முளைக்கின்றன. அதேநேரம் தலைமுடி மட்டும் உதிர்கிறது. முகப்பரு தொல்லை தருகிறது. மாதவிலக்குத் தள்ளிப்போகிறது.

இவர்களுக்கு இன்சுலினும் அதிகமாகச் சுரக்கும். ஆனால், அதைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு உடலில் இன்சுலினுக்கு எதிர்ப்புத்தன்மை (Insulin Resistance) அதிகரிக்கும். இதனால், சின்ன வயதிலேயே நீரிழிவு வந்துவிடும். இவர்களுக்குத் தைராய்டு சுரப்பியும் குறைவாகச் சுரக்கும். அப்போது சூறாவளி சுனாமி ஆவதுபோல் பி.சி.ஓ.எஸ். பிரச்சினை இன்னும் தீவிரமாகும்.

**கிட்டாத குழந்தை பாக்கியம்**


உடற்பருமனைக் கட்டுப்படுத்தாமல் திருமணம் செய்துகொள்ளும் பெண்களுக்குக் குழந்தை உண்டாவது தடைப்படும். காரணம், இவர்களில் பல பேருக்கு மெலடோனின் ஹார்மோனும் குருதியில் அதிகரிக்கிறது. இதுவும் ஆன்ட்ரோஜெனை அதிகப்படுத்துகிற அசுரன் தான். இந்த நிலைமையைச் சீராக்க பிட்யூட்டரி சுரப்பியிலிருந்து சில ஹார்மோன்கள் வீறுகொண்டு எழுகின்றன. ஆனாலும், பொங்கி வரும் காவிரியும் தடுப்பணைகள் இல்லாமல் கடலில் கலந்து வீணாவதுபோல், இவை எல்லாமே பெருத்த உடலின் கொழுப்பில் கரைந்து வீணாகின்றன. இதனால், அவர்களுக்குச் சூலகத்தில் சினைமுட்டை உண்டாவதில்லை. சீரான மாதவிலக்கு ஏற்படுவதில்லை. குழந்தை பாக்கியம் கிட்டுவதில்லை!

அப்படியானால், "அவர்களால் அம்மா ஆகவே முடியாதா?" முடியும். "எப்போது?" இவர்கள் சூலகத்தைச் சீராக்கும் சிகிச்சைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல், உடல் எடையைக் குறைக்க உடற்பயிற்சியும் செய்ய வேண்டும். அப்போதுதான் 'காரியம்' கைகூடும்.

**என்ன சிகிச்சை?**

வழக்கமான குருதிப் பரிசோதனைகளுடன், ஹார்மோன் பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன் செய்துவிட்டு, பி.சி.ஓ.எஸ். உறுதியானால், ஹார்மோன் மாத்திரைகள் கொடுத்து சினைமுட்டை பிறக்கச் செய்வது சிகிச்சையின் முதற்கட்டம்.

இதில் மாதவிலக்குச் சீராகவில்லை என்றால், அடுத்த கட்டம் அறுவை சிகிச்சைதான். அதில் சூலகத்தைச் சுற்றியுள்ள நீர்க்கட்டிகளை அகற்றுகிறார்கள் அல்லது லேப்ராஸ்கோப் வழியாக லேசர் ஒளியைச் செலுத்தி, சூலகத்திலுள்ள தேவையில்லாத திசுக்களை அகற்றுகிறார்கள். இப்படி, ஆன்ட்ரோஜென் சுரப்புக்குக் 'கடிவாளம்' போடுகிறார்கள்.



என்றாலும், இவை எல்லாமே தற்காலிகத் தீர்வுதான். சிகிச்சையை நிறுத்தியதும், களவாடப்பட்ட வளர்ப்புப் பிராணி மறுபடியும் நம் வீட்டுக்கே வந்துவிடுவதுபோல் பி.சி.ஓ.எஸ்ஸும் திரும்பி வந்து, அடுத்த குழந்தைக்குத் தடை போடும்.

எனவே, இவர்களுக்கான சரியான சிகிச்சை என்பது உடற்பருமனுக்கு 'விலங்கு' பூட்டுவது மட்டுமே! அதற்கு 'மந்திரத்தில் மாங்காய் காய்க்கும்' என்று எதிர்பார்க்கக் கூடாது. மருந்து, மாத்திரை எங்கே கிடைக்கும் என்று கூகுளில் தேடக் கூடாது.

ஒரே வழி. நேர்வழி! உணவைக் குறைக்க வேண்டும். உடற்பயிற்சிகளைக் கூட்ட வேண்டும். நடைப்பயிற்சி நல்லது. நீச்சலடிப்பதும் சைக்கிள் ஓட்டுவதும் சூலகத்துக்குத் தோள் கொடுக்கும். யோகாவும் உதவும். சின்ன வயது முதலே இவற்றைப் பின்பற்றுபவர்களுக்குப் பி.சி.ஓ.எஸ். பிரச்சினை செய்வதில்லை.

இந்த வார சமையல்

# தூதுவளை ரசம்...!

சளிக்கு உகந்தது தூதுவளை. மாத்திரமல்ல தூதுவளையிலுள்ள மருத்துவப் பயன்கள் ஏராளம். சளி, மூச்சுத் திணறல், நோய் எதிர்ப்பாற்றல் குறைவு ஆகியவற்றுக்குத் தீர்வு தரும் ஆற்றலும் வல்லமையும் தூதுவளைக்கு உண்டு. தூதுவளையில் நிறைந்திருக்கின்ற மருத்துவக் குணங்களை வைத்தியர்கள் அடுக்கிக் கொண்டே போவார்கள். அந்த அளவுக்குத் தூதுவளை சிறந்த மருத்துவ மூலிகை. சடுதியில் நோய்களை நீக்கவேண்டி ஆங்கில மருந்துகளை உள்ளெடுப்பதைவிட அன்றாடம் தூதுவளைபோன்ற மருத்துவச் செடிகளை உணவாக்கி வந்தால் எவ்வித நோய்களும் அணுகாது என்பதும் உணவே உடலுக்கு மருந்து என்பதும் வைத்தியர்கள் பலரது வாதம். இவ்வாறிருக்கையில் இந்த வாரம் தூதுவளையில் இரசம் செய்வது எப்படி என்று பார்ப்போம்.



**தேவையான பொருள்கள்...!**

தூதுவளை இலைகள் இரண்டு கைப்பிடியளவு. சின்னவெங்காயங்கள் 6, உள்ளி - 6 பற்கள், செத்தல்மிளகாய்கள் -3, சீரகம், மிளகுஈ கொள்ளு ஆகியன - தலா ஒரு தேக்கரண்டி, கொத்தமல்லி - ஒரு மேசைக் கரண்டி, புளி - 50கிராம், உப்பு, தேங்காய் எண்ணை, கறிவேப்பிலை ஆகியன சிறிதளவு.

**ரசம் கூட்டுவது எவ்வாறு?**

முதலில் புளியை நீரில் ஊற வைத்துக் கரைத்துக் கொள்ளவேண்டும். தாச்சி ஒன்றுக்குள் எண்ணை விட்டு உள்ளியை வதக்கிக் கொள்ளுங்கள். கையோடு தூதுவளை இலையையும் சேர்த்து வதக்குங்கள். கொத்தமல்லி, மிளகு, சீரகம், கொள்ளு, செத்தல் மிளகாய் ஆகியவற்றை ஒன்றாக்கி அரைத்துக்கொள்ளுங்கள், அதனுடன் சேர்த்து வதக்கி வைத்துள்ள உள்ளி - தூதுவளை இலைகளுடன் சிறிது கறிவேப்பிலை சேர்த்து தேவைக் கேற்ப தாண்ணீர் சேர்த்து அரையுங்கள். அரைத்த கலவையுடன் புளித்தண்ணீரைச் சேர்த்துதேவைக்கு ஏற்ப உப்புச் சேருங்கள்.

சட்டி ஒன்றை அடுப்பில் வைத்து நறுக்கிய சின்ன வெங்காயம், சிறிது கறிவேப்பிலை போட்டு வதக்கிவிட்டு அரைத்து வைத்துள்ள தூதுவளைக் கலவையைச் சேர்த்து நன்கு கொதிக்க வையுங்கள். கொதித்ததும் இறக்கி ருசியுங்கள். தூதுவளை ரசத்தின் ருசியையும் பயனையும் அறிவீர்கள்.

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

70

வகைப்படுத்தப்பட்ட பிரயோகத் தகுதியுள்ள பட்டறிவு, யதார்த்தமான இயலுமை, அந்த இயலுமையுடன் யதார்த்தத்தில் ஒத்துப்போகக்கூடிய திட்டமிடல் என்பவற்றினது கூட்டு முயற்சி தான் அடுத்து என்ன என்பதாக அமையவேண்டும் என்பது முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது. நாம் இவ்வாறான முக்கூட்டை அதிக கவனத்துடன் அடையாளப்படுத்த வேண்டும். அதனை எமதானதாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அதனை கதையளவாகவோ கற்பனையிலோ அன்றி யதார்த்தமான களச்சூழலில் பிரயோகப்படுத்த வேண்டும். முடியும் என்கிற நம்பிக்கை யதார்த்தமானதாக இருப்பதனை உறுதிசெய்வது அவசியமானது.

களச்சூழல் என்பது எப்படியானது? அது சாதகமானதா? இல்லையா? இதுகூட ஒருவித ஐயம் தானே? சாதகம் எதிர் பாதகம் (அல்லது சாதகமின்மை) என்பதெல்லாம் என்ன? இங்கு பட்டறிவு என்பது முக்கிய பங்காற்றுகிறது. அதனை அனுமதிக்க வேண்டும். எமது தேவை, அதனை அடைவதற்கான செயலொழுங்கு தொடர்பான ஒழுங்கில் களம் என்பது முக்கியமானது. நாம் எடுக்கும் முயற்சியினது இடம் என்று கொள்ள முடியும்.

இந்த இடம் என்பது வெறுமனே தரைத்தோற்றத்தால் மட்டுமே வரையறுக்கப்பட முடியாதது. அது தரையமைப்பு, காலநிலை, கலாசார அமைப்பு, பண்பாட்டுக் கட்டமைப்பு, நம்பிக்கைகள்சார் கட்டமைப்பு என்பவற்றையும் தன்னுள்ளேகொண்டது. குறித்த கட்டமைப்புகளால் நிறைக்கப்பட்ட ஒரு பரப்பினது எண்ண ஓட்டங்கள் இடத்திற்கிடம் வேறுபடுகின்றன என்பதை மனதிற் கொள்வது அவசியமானது. இத்தகைய வேறுபட்ட காரணிகளின் செல்வாக்கிற்குட்பட்ட களச்சூழலை அறியவும் அதனைக் கையாளவும் நிச்சயமாகப் பட்டறிவு அவசியமாகிறது.

நாம் தேவையை இனங்காண்கிறோம், எம்மை இனங்காண்கிறோம், அதன்வழி திட்டமிடுகிறோம். களச்சூழலை அனேகமாகக் கவனிப்பதில்லை. அல்லது சரியாக மதிப்பிடுவதில்லை. முழு

ஈடுபாட்டோடுதான் குறித்த ஒரு வேலையைச் செய்தோம் பயன் இல்லையே என்று அங்கலாய்க்கிறோம். அப்போதுதான் காலத்தின் மீது, முன்பிறவியின் மீது, பாவம்-பழி மீது என்றெல்லாம் எமது எண்ணங்களை பரவவிட்டு அந்தரிக்கிறோம். எம் மீதான நம்பிக்கையை நாமே தூரவாக்குகிறோம். பதிலுக்கு யதார்த்தமற்ற விடயங்களை நம்பத்தொடங்குகிறோம்.

முன்னர் பகிர்ந்துகொண்டது போல இல்லாத ஒன்று எப்படித் துணைசெய்யும்? செயல் விளைவினது பயன் எதிர்பார்த்தது போல இல்லாமலாகிவிட்டதாகப் புலம்புவதற்குப் பதிலாக எமது திட்டமிடலில் களச்சூழல் தொடர்பான பட்டறிவினது துணையுடனான மதிப்பீடு தொடர்பாக நாம் கொடுத்த முக்கியத்துவம் என்ன என்று எண்ணியிருக்கிறோமா? அனேகமாக இல்லை என்பதே பதில்.



களச்சூழல் பற்றிய மதிப்பீடு அல்ல அது தொடர்பான அறிவுகூட அனேகமாக கவனிக்கப்பட்டிருக்காது என்பது யதார்த்தமானது. கடற்கரையோரம் நெல் பயிரிடுவதும், பெண்கள் தொடர்பான கடுமையான கட்டுப்பாடுகள் உள்ள சமூகத்தில் பெண்களுக்கான நாட்டியப்பள்ளி அமைப்பதும், வரண்ட நிலத்தில் அப்பிள் தோட்டம் அமைப்பதும் என்று கடுமையான உழைப்பையும் பொருளாதாரத்தையும் கொட்டிவிட்டு பயனில்லையே என்று அழுவதில் ஏதாவது நியாயம் இருக்கமுடியுமா?

மேற்குறித்தவை போன்ற விடயங்கள் களச்சூழல் பற்றிய மதிப்பீடு, அறிவு என்பவற்றினது பற்றாக்குறை அல்லது முற்றான அறிவின்மையே தவிர வேறொன்றுமில்லை என்பதுதான் யதார்த்தமானது. இந்தக் களச்சூழல் என்பதனது பாத்திரம் எத்தகையது என்பது உணரப்படல் வேண்டும். அதனை எழுதிப்படிப்பதைவிட பட்டறிவால் புரிந்துகொள்ள முற்படவேண்டும் என்பதும் கவனத்தில் எடுக்கப்படுவது குறைவு அல்லது இல்லையென்றே கூறமுடியும்.

---



# அலப்பறை போடுறதெண்டது இதுதானோ?

கதிரேசன் காத்தவராயன்

அதிலை சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டை போனன். மாஸ்ரர்தான் தனிய பேப்பரோடை இருந்தார். என்னைக் கண்டு உற்சாகமாய் வரவேற்றார். 'என்னவாம் மாஸ்ரர் பேப்பரிலை சொல்லுறாங்கள்?' எண்டுகொண்டு இருந்தன். 'பேப்பரிலை என்ன! சர்வகட்சியும், எரிபொருள் வரிசையுந்தான்' எண்டு சலிப்போடை சொல்லிச் சிரிச்சார்.

அந்த நேரம் பாத்து சுதனும் ரண்டு பெடியளும் வந்தாங்கள். சைக்கிளிலைதான். 'என்ன தம்பி சைக்கிளுக்கு முழுசாய் மாறியாச்சுப்போலை?' எண்டன். 'வேறையென்னதான் செய்ய? வேலையோடை திரியிறம்... வேலையில்லையெண்டாத்தான் பெற்றோல் எண்டிறதல்லே இப்ப நிலமை?' எண்டான் சுதன். 'ரண்டு மூண்டு நாளாய் மோட்டச்சயிக்கிளை வெய்யிலுக்கை விடவுமல்லே மனம் வருகுதில்லை... எனிவிட்டதுக்குக் காவலுமல்லே நிக்கவேணும்... அதைவிட இது பறவாயில்லைத்தானே?' எண்டான் ஒருத்தன்.

முருகேசரும் சம்பரும் வந்து இருக்க தம்பர் வந்தார். 'இப்ப பெற்றோலை விட்டால் வேறையொண்டும் கதைக்கிறதுக்கு இல்லையெண்டல்லே ஆகிப் போச்சுது...' எண்டு முருகேசர் சிரிச்சார். 'ஏன் எரிவாயு? அதுகுமல்லே கதைக்கக் கிடக்குது?' எண்டார் சம்பர். 'அதை நாங்கள் ஒதுக்கி வைச்சிட்டம்... அது இன்னும் தீரயில்லை' எண்டு நிப்பாட்டினார் மாஸ்ரர். 'அதையேன் கேக்கிறியள்... வெக்கங்கெட்ட கதை...' எண்டு எல்லாரையும் ஒருக்காப் பாத்தார் முருகேசர்.

'பின்னையென்ன கனகண்ணையைக் கேட்டால் வடிவாச் சொல்லுவர்... அவற்றை கடையிலை உந்த எரிவாயுவாலை அவர் படுகிறபாடு...' எண்டு நான் சொல்ல 'அது நானும் கேள்விப்பட்டதுதான்... ஆனால் உண்மையோ?' எண்டு மாஸ்ரர் கேட்டார். 'உண்மைதானாம்... அவருக்கு மட்டுமில்லை கன ஏஜென்ற்மாருக்கும் உதுதான் நிலைமையாம்...' எண்டான் சுதன்.

'உதென்னப்பா ரண்டுபேரும் உங்களுக்குள்ளை கதைபறையிறியள்...' எண்டு முருகேசர் ஆவலானார்.

## அணு மின்...

''இப்போதே மறுசீரமைப்பு'' (றிஃபோம் நௌ) என்ற தலைப்பில் உரையாற்றிய ரணில், அணு மின் உற்பத்தி தொடர்பிலான தனது அக்கறையை வெளிப்படுத்தினார்.

''இலங்கையில் அணு மின் உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பில் ஓர் ஆய்வறிக்கையைப் பெறுவது குறித்து நாம் முழு அக்கறை செலுத்தவேண்டும் என்று நான் நினைக்கிறேன்'' என்றார் அவர். பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான வழிவகைகள் குறித்துப் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''எம்மிடம் கூடுதலான மின்சாரம் இருந்தால் அதனை இந்தியாவிற்கு விற்கலாம். அதேநேரம் புதுப்பிக்கத்தக்க முறைகள் மூலம் மின்சாரம் இங்கே கிடைப்பதையும் உறுதிசெய்ய முடியும்'' என்றார் அவர்.

இலங்கை தற்போது தனது மின்சார உற்பத்திக்கு டீசல் மற்றும் கரி என்பவற்றையே பெரிதும் சார்ந்துள்ளது. இவற்றில் எதுவும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. இறக்குமதியே செய்யப்படுகின்றன.

தற்போதைய டொலர் பற்றாக்குறை நெருக்கடி காரணமாக பெற்றோலியப் பொருட்களையும் கரியையும் இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளால் மின்சார உற்பத்தி பெருமளவில் பாதிகப்பட்டுள்ளது. நாடு நாளாந்தம் மின்வெட்டை எதிர்கொண்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ரணில் - மைத்திரி கூட்டு ஆட்சியைப் பிடித்த போதும் இந்தியாவுடன் இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று அன்றைய ஆட்சியினால் செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையில் அணு மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்திற்கு இந்தியா உதவும். அதன் பணியாளர்களையும் பயிற்றுவிக்கும். சிறிய அளவிலான அணு மின் உற்பத்தித் தொகுதியை இந்தியா இலங்கைக்கு விற்பதும் இந்த உடன்படிக்கையில் அடங்கும். இதன் மூலம் 2030ஆம் ஆண்டுக்குள் 600 மெகா வாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்தத் திட்டம் பின்னர் செயற்படுத்தப்படவில்லை.

இந்தப் பின்னணியிலேயே தற்போது மீண்டும் அணு மின் உற்பத்தி தொடர்பில் ரணில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

## அமைச்சுப்...

மன்றத் தெரிவுக் குழுக்கள் மூலம் தமது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க வியாழக்கிழமை டலஸ் அணியினருடன் அனைத்துக் கட்சி ஆட்சி தொடர்பில் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் தமது தரப்பிலிருந்து 4 நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

1. தற்போதைய அமைச்சரவையில் மேலதிகமாக அமைச்சர்கள் எவரும் சேர்த்துக்கொள்ளப்படக் கூடாது. பதில் அமைச்சர்கள் அல்லது ராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்படக்கூடாது.

2. நாம் அனைத்துக் கட்சி ஆட்சி என்ற எண்ணக்கருவை ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை, நாடாளுமன்றத்தில் தனிக் குழு வாக இருக்கும் எமது தரப்பு எந்த அமைச்சுப் பதவிகளையும் ஏற்கமாட்டோம்.

3. நாடாளுமன்ற உப குழுக்கள் மூலமாக அனைத்துக் கட்சி ஆட்சிக்கு சம்பந்தப்பட்ட விடயங்களில் முழுமையான ஆதரவை வழங்குவோம்.

4. கொரோனாவிற்கு முன்னைய காலப்பகுதியில் இருந்த நிலமைக்கு கல்வி நடவடிக்கைகள் விரைவில் திரும்பவேண்டும்.

ஆகிய 4 விடயங்களையும் முன்வைத்து எமது ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக அரச தலைவரிடம் தாம் உறுதியளித்துள்ளனர் என்று டலஸ் தெரிவித்தார்.

---

'அதய்யா காஸ் கடையளுக்குக் கோட்டா விலை வாறதும் அவையவைக்கெண்டு வாடிக்கைக்காறர் வாங்கிறதும்தானே வழமை?' எண்டு ஒருபெடியன் தொடங்க 'அதுதானே நடைமுறை... அதுக்குப் பதிலாயல்லே விதானைக்கூடாய் பதிஞ்சு குடுக்கினம்.. அப்பிடியல்லே?' எண்டு சுவாரசியமானார் முருகேசர். தம்பர் ஓமெண்டு தலையாட்டினார்.

'அதுதான் கதை... கன இடங்களிலை ஏஜென்ருக்குத் தெரியாத ஆக்களின்ரை பேருகள்தான் போயிருக்குது... ஏஜென்ரின்ரை பேரும் எத்தினை சிலிண்டர் அவருக்கு வருகுதெண்ட விவரமும் வந்திடுகுது... அதைப்பாத்த றெகுலர் கஸ்ரமேர்ஸ் கடையிலை போய் தங்களுக்கு எங்கையெண்டு பிரச்சனையாகியிருக்கு... கடைக்காறருக்கு குடுத்த லிஸ்ற் உத்தியோகக்காறற்றை பட்டியல். அவைக்குத்தான் முன்னுரிமை எண்ட மாதிரியான விளக்கமொண்டு குடுபட்டிருக்கு' எண்டு விளங்கப்படுத்தினான் சுதன்.

'அட.. கனகன் எனக்குத் தரேல்லை எண்டு பேசிப்போட்டன்... அதுசரி உந்த விளக்கத்தை ஆர் சொன்னதாம்?' எண்டு தம்பர் கேட்டார். 'பட்டியலைக் குடுத்தவைதான்' எண்டதுக்கு 'அதுதான் அது ஆர்?'எண்ட திரும்பவும் கேட்டார் தம்பர். 'தம்பு...வாழைப்பழத்தைத் தந்தால் உரிச்சுத் தின்ன வேணும்.. அதைவிட்டிட்டு..?' எண்டு சம்பர் அதட்டினார். பிறகு அவரே சொன்னார் 'சில விதானைமாருக்கு தங்கடை பகுதியிலை என்ன நடக்குதெண்டே தெரியுதில்லை... பதியிறதோ? ஆர் ஏஜென்ற்? எண்டும் கேக்கினம்.' எண்டார்.

'சூடு மிதிக்கிற மாடு வைக்கலைத் தின்னாமலுக்கோ? எண்டு சொல்லுறவையல்லே... அதை விடுங்கோ இப்ப எரிபொருள் விநியோகம் என்னமாதிரியாம்?' எண்டார் மாஸ்ரர். 'குழப்பமும் மோசடியளும் தட்டுப்பாடும் ஒண்டுதான் நடைமுறையள்தான் நாளுக்குநாள் மாறுது...' எண்டு ஒரு பெடியன் சொல்ல மற்றவன் 'குழப்பத்தைத் தீர்க்கிறதுக்குப் பதிலாய் புதுப்புதுக் குழப்பமான திட்டங்கள்தான்... ஒழுங்கானவங்கள் சட்டத்தைப் பாக்கிறாங்கள்... மற்றவங்கள் எரிபொருளை எடுத்து விக்கிறாங்கள்...' எண்டான் எரிச்சலோடை.

'ஒவ்வொரு செற்றிலையும் நிக்கிற நாட்டாமைப் பெடியள்தான் முழுதும்' எண்டு முருகேசர் சொல்ல 'ஏன் பொலிஸ் இல்லையோ?' எண்டார் தம்பர். 'அவை அந்தப் பெடியளிட்டை வலு மரியாதையாயல்லே நிக்கினம்' எண்டார் சம்பர். 'பேப்பரிலை வாற திட்டங்களும் நடைமுறையளும் ஐயாவேன்ரை அலப்பறைதான்... உங்கை வேறை ஒண்டுமில்லை' எண்டுகொண்டு வந்திட்டன்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.08.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781